விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: இருபது Valampurii

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 09 திங்கட்கிழமை (24.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 005



வெள்ளத்தினுள் பாதி மூழ்கிய நிலையில் பஸ்...

கடும் மழையை அடுத்து வவுனியாவில் உள்ள குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டமையினால் வவுனியா செட்டிக்குளம் வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் அவ் வீதியினூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.



# வவுனியாவில் அடைமழை குளங்கள் உடைப்பெடுப்பு

## வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின

(வவுனியா), வவுனியாவில் பெய்துவரும் அடைமழை காரணமாக குளங்களின் நீர்மட்டம் சடுதியாக அதிகரித்து உடைப்பெடுத்துள்ளன. இதன் காரணமாக பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

தாண்டிக்குளம், திருநாவற்குளம், சமணங்குளம், கோமரசங்குளம், கந்தசாமி நகர், குடியிருப்பு, புதுக்குளம், பூந்தோட்டம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வெள்ளம் வீடுகளுக்குள்ளும் புகுந்துள்ளதுடன் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்களும் வெளியேறி வருகின்றனர்.

பாவற்குளத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் அதன் 6 அவசர வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதால் பூவரசங்குளம் ஊடான செட்டிக்குளம் வீதியே இனம்காண முடியாமல் வெள்ளம் நிரம்பி வழிந்தோடுகிறது.

குறித்த வீதிக்கு அருகே உள்ள கந்தசாமி நகர், வீடியோ நகர் ஆகிய கிராமங்கள் முழுமையாக வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதால் வெளியிடத் தொடர்புகள் அற்ற நிலையில் காணப்படுகின்றது.

அதனால் அங்குள்ள 39 குடும்பங்களையும் மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் நொச்சிமோட்டை பாலம் மேவி பாய்வதால் ஏ-9 வீதி போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்கள் நேற்றிரவு அத்துமீறல்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் மாரிசன்கூடல் கடற்பகுதியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட இந்திய ரோலர் படகுகள் அத்துமீறி நுழைந்து அங்கு கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கை மீனவர்களின் வலைகளை அறுத்தும் படகுகளை சேதப்படுத்தியும், மீன்களைப் பறித்தும் சென்றுள்ளனர். இச்சம்பவம் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சண்டிலிப்பாய் மாரிசன்கூடல் கடற்பரப்பில் நேற்றிரவு 8.30 மணியளவில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் முப்பது படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் ஐம்பதுக்கும் (19ஆம் பக்கம் பார்க்க)

## 3 மணிநேரம் மூடப்பட்ட ஏ-9 வீதி

வடக்கில் சில இடங்களில் பெய்துவருகின்ற கடும் மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த ஏ-9 வீதி 3 மணித்தியாலங்களுக்குப் பின்னர் திறக்கப்பட்டது.

இந்த வீதியில் பல இடங்கள் வெள்ளத்தினால் மூழ்கியிருந்ததை அடுத்து ஏ-9 வீதி நேற்றுப் பிற்பகல் (19ஆம் பக்கம் பார்க்க)

## கலர் மழையும் மீன் மழையும்

மாத்தளை மாவட்டத்தில் நாவுல பிரதேசத்தில் மூன்று கிராமங்களில் சிவப்பு, மஞ்சள் மற்றும் மீன் மழை பெய்ததாக பிரதேசவாசிகள் தெரி வித்துள்ளனர்.

நாவுல பிரதேசத்தில் வீ ஹேனட்ட கிராமத்தில் மஞ்சள் (19ஆம் பக்கம் பார்க்க)

## சூரியனை சுற்றி வர்ண ஒளி வட்டம்

சூரியனைச் சுற்றி வர்ண ஒளிவட்டம் காணப்படுகின்றது. இலங்கை மக்களால் இது அவதானிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

வானவில்லில் உள்ள வர்ணங்களை போன்றே இந்த வட்டம் காட்சியளிக்கிறது.

இலங்கையில் அண்மைக்காலமாக பல விநோத சம்பங்கள் இடம்பெற்றுவரும் நிலையில் இந்தக் (19ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞனை காணவில்லை தாயார் பொலிஸில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

இளைஞர் ஒருவரைக் காணவில்லை என அவரது தாயார் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்.ஓட்டுமடத்தினைச் சேர்ந்த பற்குணராஜா சாரங்கன் (வயது 22) என்ற இளைஞரைக் காணவில்லை என்றே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் மிதிவெடி அகற்றும் நிறுவனமொன்றில் வேலை செய்வதாகவும் கடந்த 12ஆம் திகதி வேலைக்கு சென்று வீடு திரும்பவில்லை எனவும் அம் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகத்தை இல்லாதொழிக்க உயர்நீதிமன்றமே காரணமானது!

### முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் விளக்கம்

(கொழும்பு)

ஜனநாயக வழிமுறைகளை இல்லாதொழிக்கும் வகையில் 18-ம் திருத்தம் அமைந்துள்ளது.

இத்தகைய பாதிப்புக்களை கொண்டுள்ள 18-வது திருத்தத்தை சட்டமாக்குவதற்கு உயர் நீதிமன்றமே காரணகர்த்தாவாக இருந்துள்ளது என ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களை விட 18-வது திருத்தச்சட்ட மூலத்தில் வழங்கப்பட்டுள்ள அபரிமிதமான அதிகாரங்களின் பிரதிபலனாகவே பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணைக்கு நாம் முகம் கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டது என்று ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## நிர்வாகத்தின் அனுமதியின்றி இராணுவம் நுழையக்கூடாது

### துணைவேந்தர் காட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்துக்குள்ளேயோ மாணவர்களின் விடுதிக்குள்ளேயோ பல்கலைக்கழக நிர்வாகத்தின் அனுமதியின்றி இராணுவத்தினர் உள் நுழையக் கூடாது என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் யாழ்.கட்டளைத் தளபதியிடம் காட்டமாகத் தெரிவித்தார்.

குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விடுதலை தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினர், தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களின் பெற்றோர் மற்றும் மாணவப் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவை கடந்த 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை பலாலி படைத் (20ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை சுதந்திர பட்டதாரிகள் மாநாட்டிற்கான அழைப்பு-2013.01.12

அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து இலங்கை சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் 2013.01.12 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் பட்டதாரிகள் மாநாடு நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்டத்தில் அங்கஜன் இராமநாதன் தலைமையில் யாழ். சுதந்திர பட்டதாரிகள் சங்கம் நிறுவப்பட்டு அதில் உறுப்பினர்களாக உள்ள அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் அனைத்து சுதந்திர பட்டதாரிகள் உறுப்பினர்களையும் அதேவேளை புதிய பட்டதாரிகளும் இணைந்து யாழ்ப்பாணப் பட்டதாரிகளுக்கான அனுகூலங்களினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அங்கஜன் இராமநாதன் கேட்டுக் கொள்கிறார்.

அங்கஜன் இராமநாதன்
யாழ்.சுதந்திர பட்டதாரிகள் சங்கத் தலைவர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர்

T.P.: 021 7200809

(இ-1888)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இளைஞர் புலி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது

## திவயினவில் செய்தி

(கொழும்பு)

இளைஞர் புலி அமைப்பு என்ற ஓர் பயங்கரவாத இயக்கமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டின் முக்கிய பாதுகாப்பு நிலைகள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கில் இந்த இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட இருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

புதிய இளைஞர் புலி அமைப்பின் தலைவராகக் கருதப்படும் சுரேஸ்குமார் என்பவர் தமிழகத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.


சுரேஸ்குமார், தமிழீழ விடுதலைப் புலிகளின் குண்டுத்தயாரிப்புப் பிரிவில் கடமையாற்றியுள்ளார் என்பது விசாரண்ணகளின் மூலம் தெரியவந்துள்ளது.

தமிழகத்தில் பயிற்சிகளை வழங்கி அவர்களை இலங்கைக்கு அனுப்பி நாச வேலைகளில் ஈடுபட திட்டமிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு நாடுகளில் வாழும் புலி ஆதரவாளர்களை அழைத்து அவர்களுக்கு வெடி பொருள்கள் தொடர்பில் தமிழகத்தில் வைத்து பயிற்சிகளை வழங்கத் திட்டமிடப்பட்டிருந்ததாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது என திவயின செய்தி வெளியிட்டுள்ளது. (எ-11)

# ஆபத்தான நிலையில் மின்கம்பங்கள் தீவுப்பகுதி மக்கள் அச்சத்தில்!

## தெரிந்தும் தெரியாமல் இருக்கும் மின்சார சபை



(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிக்கான பிரதான வீதியின் மின்சாரக்கம்பங்கள் விழும் நிலையில் காணப்படுவதாகமக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அல்லைப்பிட்டி முதல் அராலிச் சந்தி வரையிலான பகுதியில் நாட்டப்பட்டுள்ள அதிவேக வலுக் கொண்ட மின்கம்பிகள் பொருத்தப்பட்ட கம்பங்களே விழும் நிலையில் உள்ளன.

அவை ஆபத்தை விளைவிக்கக் கூடியவை என மின்சார சபைக்குத் தெரிந்துள்ள போதிலும் அது குறித்து அவர்கள் அசட்டையீனமாக உள்ளனர்.

சரிந்த நிலையில் காணப்படும் மின் கம்பங்களுக்கு இரும்புக்கேபர்களை இணைத்து கட்டியும் உள்ளனர்.

இப்பாதையூடாக அனைத்து பிரதேச மக் களும் சுற்றுலா பயணிகளும் சென்று வருகின்றனர்.

இந் நிலையில் மழை நீர் தேங்கி மின் கம் பங்கள் சரியும் நிலையில் காணப்படுகின்றன.

அவை விழும் பட்சத்தில் மிகப்பெரிய ஆபத்து நேரும் சாத்தியம் உள்ளது. எனவே மின்சார சபையினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு விபத்துக்களை தடுக்க முன்வர வேண்டும் என மக்களும், பேருந்து சாரதிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஏ)


நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவுகள்

3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக்கூடியவாறு துரித சேவை....

| கட்டணங்கள் | (1Kg) இற்கு |
|---|---|
| லண்டன் | 1500/- |
| கனடா | 2600/- |
| சுவிஸ் | 1200/- |
| அவுஸ்திரேலியா | 1000/- |
| ஜேர்மனி | 1000/- |



சாதாரண சேவை 1 kg க்கு : கனடா 700/- லண்டன் 600/-
(பொதிகள் நிறை 5 Kg க்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

குறிப்பு: ஆவணங்கள், கடிதங்கள் அனுப்புவதற்கு விசேட கட்டணம்
லண்டன், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு
500 கிராமுக்கு 2000 ரூபா மட்டுமே...!!
3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி உங்கள் பிரதேசங்களில் உள்ள பின்வரும் வியாபார ஸ்தாபனங்களில் பொதிகளை ஒப்படைக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

நெல்லியடி மருதம் கொமினிகேசன் 021 226 3210
வல்வெட்டித்துறை: V2 Travels and Tours 021 2055044 (சி-1818)

மேலதிக தொடர்புகளுக்கு:
Rain Bow Travels
இல.30/2. 3 ஆம் ஒழுங்கை. மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். 0212219596



பழுதடைந்த முச்சக்கர வண்டிக்கான கேள்வி கோரல்

எமது இல்லப் பாவனையிலுள்ள பழுதடைந்த முச்சக்கர வண்டியைக் கேள்விகோரி விற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

30.12.2012ற்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ தங்களது கேள்விக் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கலாம். வாகனத்தினை அலுவலக நேரத்தில் பி.ப. 1.00 மணி வரை பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு :- தி.இராசநாயகம், தலைவர்
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இலக்கம் :- 077 0604950, 021 4923118
(சி-1892)



அது வேண்டுமா? இது வேண்டுமா?
எது வேண்டுமானாலும் இருந்த இடத்திலிருந்தே அழையுங்கள்
077 146 4525
வாங்கவும் விற்றுத்தரவும்
✓காணி, ✓வீடு, ✓கார், ✓ மோட்டார் சைக்கிள்கள்
✓மின்சாதனப் பொருட்கள்
அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்கள் மூலம் உங்களுக்கு வேண்டிய அனைத்து ஆவணங்களும் மொழி பெயர்த்து தரப்படும்.
சகல நாடுகளுக்குமான SPONCER உங்களுக்கு வேண்டிய தொகையில் செய்துதரப்படும்.
கொழும்பு - யாழ், பஸ், வான் ஆசனப்பதிவுகள்
அரசடி வீதி, நல்லூர். (நியந்தனைக்குட்பட்டது) (C-1891)


## மரண அறிவித்தல்

தவசிகுளம் கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் மகாத்மா வீதி நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியராசா உதயபாஸ்கரன் அவர்கள் 22.12.2012 அன்று இறைபதம் அடைந்தார்.

இவரின் இறுதிக்கிரியைகள் 24.12.2012 அன்று காலை 10.00 மணிக்கு மரியராசா சிறிஸ்மாபரன் (மதன்) அவர்களது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
ம.சிறிஸ்மாபரன் (தம்பி)
றதன் சேவிஸ் நிலையம்
077 699 6501

மூடக்காட்டு வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.
(C-1885)


தனியார் வைத்திய நிலையம் / பார்மசி வாடகைக்கு

பருத்தித்துறை பஸ் டிப்போவிற்கு முன்னால் உள்ள மெடிக்கல் கிளினிக் + பார்மசி அமைந்துள்ள கட்டிட தொகுதி 2013ஆம் ஆண்டு முற்பகுதியில் வாடகைக்கு விடப்படும். வைத்தியர்கள் தங்குமிட வசதியும் நோயாளர்கள் வாட் வசதிகளும் உண்டு.

தொடர்பு :- இராசநேரு
T.P. :- 0776256292
(1321)



விற்பனைக்கு
கடைக்குரிய மரத்திலான நிலையும் கதவும் விற்பனைக்கு உண்டு.
077 2850753 (1323)



சேல்ஸ்மன் தேவை
A/L, O/L எடுத்த மாணவர்கள் புடவை வியாபாரம் பழகுவதற்கு தேவை. புடவை அனுபவம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது.
சிவகணேசன் ரெக்ஸ் ரைல்ஸ்
41, பெரியகடை, யாழ்ப்பாணம். (1323)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு

அமரர்
சாந்தலிங்கம் சித்திரவேல்
(ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தர்)

மலர்வு 10 01 1947
உதிர்வு 05 01 2012

திதி : 24.12.2012



எம் குடும்பத்தலைவரை பிரிந்து
ஆண்டொன்று ஓடிவிட்டதே!

ஒளியாகி என் விழியாகி
மூச்சாகி நின்ற என் அப்பாவே
அழியாத அன்புடன்
எம்மை காத்த அப்பாவே
என்றும் உங்கள் நினைவில்


மான் பாடசாலை வீதி,
டச்சு றோட்,
உடுவில்.

அன்புடன்
மனைவி - பவளராணி
மகன் - கிருஸ்ணானந்

(சி-1889)

## மறைந்து போனவன் அல்ல எம்முள் உறைந்து போனவன்

பிறப்பு 27 04 1971
இறப்பு 06 02 2012



திதி : 24.12.2012

அமரர்
துரைராஜா விக்னேஸ்வரன்
(பிள்ளையார்)

நேற்றுப்போல் உள்ளது
எமை நிமிர்த்திய
நிமிர்வே நீ!
சரிந்துவிட்ட செய்தி கேட்டு
நாம் எரிந்துவிட்ட
கணப்பொழுது - எங்கள்
அடிவயிற்றில்
அடிபிடித்து ஆண்டு
ஒன்றாகிவிட்டது
சோகம் சுட்டெரித்து
கண்ணீரை வைற்ற வைத்த
கணத்திற்கு வயது
ஒன்றாகிவிட்டது.
வரமாட்டாய்...?
என்பதைவிட
வருவாய் என்றே
நம்புகிறோம் அப்பப்போ
வரும் கண்ணீரில் நின்
நினைவுகள் அடைகாப்பதை
ஆண்டு ஒன்றென்ன நாம்
மாண்டு போகும்வரை
மறவோம் மறவோம்...

தகவல்:
குடும்பத்தினர்,
பரமந்தனாறு,
கிளிநொச்சி.
(சி-1886)


செல்லா சினிமா யாழ்ப்பாணம்




விஜய், காஜல் அகர்வால் மற்றும் பலர் நடிப்பில்
10.30, 2.30, 6.30, 9.30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மூளை ஆராய்ச்சி

ஒருவர் மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். "ஏன் கவலைப்படுகிறீர்கள்" என்று இன்னொருவர் கேட்டார்.

''கடன் கொடுத்துவிட்டேன்'' அதனாலே கவலைப்படுகிறேன்''

"கேட்பதற்கு ஆச்சரியமாக இருக்கிறதே" என்று அவர் கூறினார். "இதிலே என்ன சேர் ஆச்சரியம்... இக்காலத்திலே கடன் கொடுத்தவன்தான் கவலைப்படவேண்டும். கடன் வாங்கியவனா கவலைப்படுவான்?"

இவ்வுலகிலே எதை வேண்டுமென்றாலும் கடன் கொடுக்கலாம். ஆனால், ஒரு விடயத்தைக் கடன் கொடுக்கக்கூடாது என்று சொல்வார்கள்.

அது எது தெரியுமா? புத்தியை ... ஆனால்... விஞ்ஞானம் போகும் வேகத்தில் இனிமேல் அதையும் கடன் கொடுக்கலாம் போலுள்ளது.

ரஷ்யாவிலே சில வைத்தியர்கள் சேர்ந்து மூளை ஆராய்ச்சி செய்தார்கள். முதலிலே 30 நாட்கள் கொண்ட ஒரு முயல்குட்டியை பிடித்து அதன் மூளையில் Cortex என்ற பகுதியை சத்திர சிகிச்சை செய்து எடுத்துக் கொண்டார். அந்த முயல்குட்டியை ஒரு வருடத்துக்கு வழக்கம் போல அனைத்தையும் கொடுத்து வளர்த்தார்கள். அந்த முயல்குட்டியும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் வளர்ந்து வந்தது.

ஒரு வருடம் கடந்த நிலையில் மீண்டும் முயல்குட்டியின் தலையில் சத்திரசிகிச்சை நடைபெற்றது. திறந்து பார்த்தால் ஒரே ஆச்சரியம்.

மூளையிலிருந்து எடுக்கப்பட்ட Cortex பகுதி மீண்டும் முன்பிருந்த மாதிரியே வளர்ந்து இருந்தது.

இதிலேயிருந்து என்ன தெரிகிறது... மூளையிலே ஒரு பகுதியை எடுத்து விட்டால் மறுபடியும் அது வளர்ந்து விடும் என்பது உறுதியாகத் தெரிகிறது.

சில பேருக்கு கடுமையான தலையிலே காயம் ஏற்படலாம். அச்சமயத்திலே மூளையிலே பாதிப்பு ஏற்படும். அதற்கு புதுமுறையிலே சிகிச்சைகள் கொடுப்பதற்கு இந்த ஆராய்ச்சி உபயோகமாக இருக்கும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# ஐ.நாவுக்கு வழங்கிய வாக்குறுதியை இலங்கை அரசு மீறியுள்ளது-லக்பிம

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் தற்போது பிரதம நீதியரசருக்கு எதிராக மேற்கொண்டுள்ள குற்றவியல் பிரேரணை நடைமுறைகள் ஏற்கனவே 2002 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளுக்கு வழங்கிய உறுதிமொழிகளுக்கு எதிரானவை என்று லக்பிம செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிராக குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்பட்ட போது அதனை நீதித்துறையே ஆராயலாம் என்ற உறுதி மொழியை இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் சபைக்கு வழங்கியிருந்தது.

எனினும் தற்போது அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ள இலங்கையின் நாடாளுமன்றத்துக்கு நீதித்துறையோ அல்லது வெளி நிறுவனங்களோ உத்தரவிட முடியாது என்று அண்மையில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் குறித்த செயற்பாடு ஐக்கிய நாடுகளுக்கு வழங்கிய உறுதி மொழிக்கு எதிரானது என்று லக்பிம குறிப்பிட்டுள்ளது.

இதனடிப்படையிலேயே பிரதம நீதியரசர் நாடாளுமன்ற தெரிவுக்குழு தமக்கு எதிராக வெளியிட்டுள்ள அறிக்கையை ஆட்சேபித்து தாக்கல் செய்துள்ள மனு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் சபாநாயகர் உட்பட நாடாளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளமையையும் லக்பிம சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# வாகன விபத்தில் இருவர் காயம்

(பூந்தோட்டம்)

வவுனியா நொச்சிமோட்டை பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் இருவர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று அதிகாலை 3.20 மணியளவில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற கன்ரர் ரக வாகனமும் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்த இ.போ.சபை பேருந்தும் நேருக்குநேர் மோதுண்டதுடன் கன்ரர் ரக வாகனத்தினை தொடர்ந்து பயணித்த டொல்பின் ரக வாகனமும் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கன்ரர் ரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன் காரணமாக டொல்பின் வாகனத்தில் பயணித்தவர் மற்றும் பேருந்தில் பயணித்த ஒருவருமாக இருவர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை வவுனியா விவசாய பண்ணைக்கு முன்னால் கார் ஒன்று விபத்துக்குள்ளாகிய நிலையிலும் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. எனினும் காரின் பின் பகுதி பலத்த சேதமடைந்துள்ளது. (அ-9-266)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 | 90 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 250 | 250 |
| தக்காளி | 100 | 140 | 120 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 80 | 120 | 140 |
| பூசணி | 35 | 30 | 50 | 50 |
| புடோல் | 40-50 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 60-70 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 120-160 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 160 |
| பாகற்காய் | 120 | 160 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 80 | 70 |
| பயற்றங்காய் | 80-90 | 80 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 | 140 |
| பீற்றூட் | -- | 100 | 160 | 120 |
| கறிமிளகாய் | -- | 160 | 150 | 200 |
| இராசவள்ளி | 170 | 140 | 130 | 160 |
| போஞ்சி | 100 | 80 | 100 | 60 |
| கத்தரிதம்புள்ள | -- | 100 | 80 | -- |
| கீரை - 1 பிடி | 7-8 | 10 | 30-40 | 25 |
| தேசிக்காய் | 50 | 90 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 40 | 30-40 | 30-35 |

# இராசி பலன்

*24.12.2012*
*(மார்கழி 09, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு*
*ஏகாதசி காலை 7.59 மணிவரை*
*பரணி முன்னிரவு 8.16 மணிவரை*
*இராகுகாலம் 7.53-9.23 மணிவரை*
*சுபநேரம் 12.23-1.53 மணிவரை*
*சுவர்க்க வாயில் ஏகாதசி.*

**மேடம்** சிந்தனை மிகுதியான நாள், நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், சிலர் மீது காரணம் இல்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது, பிரியமான சிலருக்காக சில செலவுகள் செய்ய வேண்டி வரலாம், சயன சுகக் 'குறைவான நாள், வீண் அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பண வரவு எதிர்பார்த்த படியே வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கௌரவமான நாள், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும்.

**கடகம்** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் வந்து சேரலாம், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் அதிகரிக்கும், ஒளிமயமான வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் நாள்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், சாமர்த்தியமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**கன்னி** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியக் குறைவான நிலைப்பாடுகள் ஏற்படலாம், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, பிரயாண பயமுண்டு.

**துலாம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், வருமானம் திருப்தி தரும், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்களில் சேர்க்கையுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** உடன்பிறப்புக்கள் உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வர், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், போசன நன்மையுண்டு.

**தனுசு** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், உஷ்ண சம்பந்தமான சில ரோகங்கள் ஏற்படலாம், பிள்ளைகளின் நலன்களில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனைகளை கூற முன்வரலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், வேலையில் சிறு சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், உடன் பிறப்புக்களின் குணத்தை அறிந்து நடந்து கொள்வீர்கள், போசன நன்மையுண்டு.

**மீனம்** குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்கால நலன் கருதி சேமிக்க நினைப்பீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும்.

வளவன்


Digitised by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அதிவேக நெடுஞ்சாலை; முதற்கட்ட நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான வடக்கு அதிவேக நெடுஞ்சாலை (Northern Expressway) நிர்மாணத்துக்கான முதல் கட்ட நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகளுக்கான முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதற்காக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த SMEC இன்டர்நஷனல் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்துக்கு ஆரம்ப கட்ட மதிப்பீட்டு பணிகளை(Feasibility Studies) மேற்கொண்டு, நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கான விலைமனுக் கோரல்களை தயாரிப்பதற்கான அங்கீகாரத்தை இலங்கை அரசு வழங்கியுள்ளதாகவும், இதற்காக 3.99 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களையும், 414 மில்லியன் இலங்கை ரூபாயையும் வழங்கியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.




வடக்கு அதிவேக நெடுஞ்சாலையின் முதற்கட்டமாக அமையவுள்ள கொழும்பு–கண்டி அதிவேக நெடுஞ்சாலை வத்தளை–எந்தேரமுல்லை பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு குருணாகலைக்கு அண்மையில் அமைந்துள்ள பெல்லந்தெனிய வரையில் அமையவுள்ளதுடன்,

மேலும் பொதுப்பிட்டியவிலிருந்து கண்டிக்கு அருகிலுள்ள ஹீதெனிய வரையில் இணைப்பு அதிவேக நெடுஞ்சாலையாகவும் அமையவுள்ளது.

பின்னர் இந்த அதிவேக நெடுஞ்சாலை வடக்கில் யாழ்ப்பாணம் வரையிலும், கிழக்கில் திருகோணமலை வரையிலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக உத்தேசிக்கப்பட்டுள்ள அதிவேக நெடுஞ்சாலையின் முதல் பகுதி 3 கட்டங்களாக அமைக்கப்படவுள்ளது. இதன்படி முதல் கட்டம் 4 வழித் தடத்துடன் (4 Lanes) 42.5 கிலோமீற்றர் நீளம் கொண்டதாக எந்தேரமுல்லையில் இருந்து மீரிகம வரையில் அமைக்கப்படவுள்ளது.

வடக்குஅதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட்டால் யாழ்ப்பாணம்–கொழும்பு பயண நேரம் 3 மணி நேரமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.





## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ரூ.75 பில்லியன் நட்டம்

இம்மாத ஆரம்பம் முதல் பெற்றோலின்(90 ஒக்டேன்) விலை லீற்றருக்கு 10 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டதுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சுசந்த சில்வா விளக்கமளிக்கையில், கடந்த ஒக்டோபர் மாதம் வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 75 பில்லியன் ரூபாய் (7,500 கோடி) வரை நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு பிரதான காரணம்: சர்வதேச சந்தையில் விலை அதிகரிப்புக்கு ஏற்ப இலங்கையில் விலையில் மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாமை அமைந்திருந்தது. இந்த நிலையை சீர் செய்யும் வகையில் இந்த விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது என்றார்.

தற்போது விலை லீற்றர் ஒன்றுக்கு 10 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், கூட்டுத்தாபனம் இன்னமும் லீற்றர் ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஹட்சிற்கு புதிய சிஈஓ



ஹட்ச் சிறிலங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக (CEO) திருகுமார் நடராசா நியமிக்கப்பட்டுள்ளதாக ஹட்சிசன் ஏசியா டெலிகொமினிகேஷன்ஸ் லிமிட்டட், ஹொங்கொங் அறிவித்துள்ளது.

தொலைத்தொடர்புத் துறையில் 20 வருட காலம் பணியாற்றிய அனுபவத்தை இவர் கொண்டுள்ளார்.

# இலங்கை நிதித்துறை பலவீனமாக உள்ளது!

இலங்கையின் நிதித்துறை கட்டமைப்பு மற்றும் நிர்வாகம் பலவீனமாகவும், ஆபத்தான நிலையிலும் உள்ளதாக, சர்வதேச பொருளாதார மதிப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான ஃபிட்ச் தெரிவித்துள்ளது.

கடந்த ஓரிரு வருடங்களாகவே இலங்கையின் நிதி நிலைமை ஸ்திரமற்ற சூழலில் இருந்தது எனவும், அதன் உச்சக்கட்டம் ஃபிட்ச் நிறுவனத்தின் கணிப்பீடு என்றும் பொருளாதார ஆய்வாளர் கலாநிதி முத்துக் கிருஸ்ண சர்வாநந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மத்திய வங்கி, அரச வங்கிகள் மட்டுமல்லாமல் தனியார் வங்கிகளையும் அரசின் கொள்கைகளுக்கு ஏற்றவாறு வற்புறுத்தி வருவது நிதித்துறையில் பெரிய நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது எனவும் அவர் கூறுகிறார்.

மத்திய வங்கியின் தலையீடு ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவை விட அதிகமாக இருப்பதால்தான், இந்த நெருக்கடி நிலை தோன்றியுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாகவே இலங்கையின் நிதித்துறை பெருமளவில் வெளிநாட்டு முதலீடுகளிலேயே தங்கியுள்ள சூழலில், ஃபிட்ச் நிறுவனத்தின் கருத்துக்கள், இலங்கை அரசு மற்றும் நிதி நிறுவனங்கள் சர்வதேச சந்தையில் கடன் வாங்குவதை மேலும் சிக்கலாக்கும் வாய்ப்பு உள்ளது எனவும் சர்வானந்தன் கூறியுள்ளார்.

இலங்கை அரசு இப்படியான அமைப்புகள் கூறும் கருத்துக்களையோ பரிந்துரைகளையோ ஏற்று நடக்கக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதாகத் தெரியவில்லை. என்றும் இந்த ஆண்டை விட அடுத்த ஆண்டில் (2013) இலங்கை மேலும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் எனவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

## மூன்றாம் காலாண்டில் நாட்டின் மொ.தே.உ/தி வீழ்ச்சி

நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி யுத்தம் நிறைவடைந்த பின்னர் முதல் தடவையாக இவ்வாண்டின் மூன்றாம் காலாண்டில் வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

2012-ம் ஆண்டின் ஜூலை முதல் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரம் 4.8 வீத வளர்ச்சியை மட்டுமே பதிவு செய்திருந்ததாகவும், 2010 மற்றும் 2011-ம் ஆண்டுகளில் இதே காலப்பகுதியில் முறையே 8.5 வீதம் மற்றும் 8 வீத பொருளாதார வளர்ச்சி பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2009-ம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 4.2 வீத பொருளாதார வளர்ச்சி பதிவாகியிருந்தமையைத் தொடர்ந்து முதல் தடவையாக பொருளாதார வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வீழ்ச்சிக்கு சேவைகள் துறை, விவசாயம், வனாந்தரம் மற்றும் மீன்பிடி போன்ற துறைகள் பிரதான பங்களிப்பை வழங்கியிருந்தன.

இதனைத் தொடர்ந்து நாட்டின் மொத்த பொருளாதார வளர்ச்சியை முன்னர் கணிக்கப்பட்ட 6.8 சதவீதத்திலிருந்து 6.5 சதவீதமாக இலங்கை மத்திய வங்கி குறைத்துள்ளது.

## புதிய நிர்வாக, நிதி கொள்கைகளை அறிமுகப்படுத்த அரசு திட்டம்

தற்போது அமுலில் உள்ள நிர்வாக மற்றும் நிதி கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி புதிய கொள்கைகளை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. இந்தப் புதிய கொள்கைகள் மூன்று மாத காலப் பகுதியினுள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இலங்கையில் திறந்த பொருளாதார கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இந்த இரு கொள்கைகளும் அமுல்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சுமார் 50 ஆண்டு காலமாக இந்தக் கொள்கைகளில் எந்தவிதமான மாற்றங்களும் மேற்கொள்ளப்படாத நிலையில் தற்போதைய நவீன பொருளாதார நிலைமைகளுக்கு அமைய இந்த இரு கொள்கைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளதாகவும், இவ்வாறு மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் அவை தனியார் துறையினருக்கு பெரும் சாதகமானதாக அமையுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# டாட்டாவின் வர்த்தக இலக்கு ரூ.25 இலட்சம் கோடி

## புதிய தலைவர் சாதிப்பாரா?



சைரஸ் மிஸ்த்ரி | ரத்தன் டாட்டா

டாட்டா குழுமத்தின் தலைவர் ரத்தன் டாட்டாவுக்கு எதிர்வரும் 28-ம் திகதி 75ஆவது பிறந்த நாள்.

தமது குழுமத்தின் விதிகளின்படி ஓய்வுபெறும் டாட்டாவின் இடத்தை நிரப்ப, டாட்டா சன்ஸ் துணைத் தலைவர் சைரஸ் பி.மிஸ்த்ரி வர உள்ளார்.

உப்பு முதல் உருக்கு வரை, தேயிலை முதல் தொலைத்தொடர்பு சேவைவரை கால்பதித்துள்ள டாட்டா குழுமம், விட்டுவைத்த துறைகளை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

தற்போது ஆண்டுக்கு 5.50 லட்சம் கோடி இந்திய ரூபாயை விற்றுமுதலாக ஈட்டிவரும் இக்குழுமம், இதை வரும் 2021-ம் ஆண்டில் 25 இலட்சம் கோடி ரூபாயாக உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளது.

இந்த மிகப் பெரிய பொறுப்பை, 44 வயதான சைரஸ் மிஸ்த்ரி, நிறைவேற்றுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இங்கிலாந்தில் பொறியியல் படிப்பும் லண்டன் வணிக கல்லூரியில் உயர் கல்வியும், குடும்ப நிறுவனமான சபூர்ஜி பலோன்ஜியை திறம்பட நிர்வகித்த அனுபவமும் இவருக்கு உண்டு.

**நிர்வாகத் திறமை:**

இவரது சீரிய நிர்வாகத் திறமையும், உடனுக்குடன் முடிவெடுக்கும் ஆற்றலும், ரத்தன் டாட்டாவை பெரிதும் கவர்ந்திடவே, தற்போது டாட்டா குழுமத்தின் தலைவராக பொறுப்பேற்கவுள்ளார்.

டாட்டா குடும்பத்தின் மூன்றாம் தலைமுறையை சேர்ந்த ரத்தன் டாட்டா, இனி டாட்டா குழுமத்தின் நிர்வாக நடவடிக்கைகளில் தலையிடப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,522.72 | 5,516.49 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5,045.20 | 5,044.58 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,022.79 | 3,034.24 ⇧ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 5,355.967

***உயர்வடைந்த பங்குகள்*** ஹரிச்சந்திர(2499.50), நமுனுகுல(82.20), ஹொட்டகல(75.30), ஏசியன் அலைன்ஸ்(89.00), மக்வூட் எனர்ஜி(12.50).

***வீழ்ச்சியடைந்த பங்குகள்*** மிரமர்(80.50), ரீ சிமோல் ஹோல்டர்(42.50), ஷலிமர்(900.00), சிங்கலங்கா(88.10), ஆஸிரி சென்ரல்(220.00)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 124.58 | 127.63 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 201.92 | 207.83 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 163.56 | 169.05 |
| சுவிஸ் பிராங் | 135.23 | 140.46 |
| கனேடிய டொலர் | 125.11 | 129.67 |
| அவுஸ்திரேலிய டொலர் | 129.24 | 134.24 |
| சிங்கப்பூர் டொலர் | 101.49 | 105.04 |
| ஜப்பான் யென் | 1.47 | 1.52 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.33 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.81 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷிராணி சவால் விடுப்பார் என அரசாங்கம் எண்ணியிருக்கவில்லை

## கிரியெல்ல எம்.பி. தெரிவிப்பு

நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்த எந்த அரசாங்கத்திற்கும் உரிமை கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.பாராளுமன்ற தெரிவுக்குழு விசாரணைகளின் போது இந்த நடவடிக்கை பொருத்தமற்றது என்பதனை தாம் தெரிவுக்குழுவின் தலைவர் அனுர பிரியதர்சன யாப்பாவிற்கு அறிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.பாராளுமன்ற உறுப்பினர்களினால் குற்றம் சுமத்தப்பட்டு அவர்களினாலேயே விசாரணை செய்து அவர்களே தீர்ப்பளிக்கும் நடைமுறை பொருத்தமற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.நம்பிக்கையில்லாத் தீர்மானம் விசாரணைகள் நடத்தப்பட்டால் பிரதம நீதியரசர் பதவி விலகிவிடுவார் என அரசாங்கம் எதிர்பார்த்ததாகத் தெரிவித்துள்ளார்.

நீண்ட விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற அவசியம் ஏற்படும் என அரசாங்கம் கருதவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.விசாரணைகளுக்கு எதிராக பிரதம நீதியரசர் சவால் விடுப்பார் என அரசாங்கம் நினைத்துப் பார்க்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதிலும் அதனை நிரூபிக்க ஆதாரங்கள் எதுவும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ரிசானாவுக்கு மன்னிப்பு வழங்குமாறு கோரிக்கை

## கடிதம் எழுதினார் பீரிஸ்

இலங்கைப் பணிப்பெண் ரிசானா நபீக்கிற்கு மன்னிப்பு வழங்குமாறு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் மனிதாபிமான அடிப்படையில் மரண தண்டனையை இரத்து செய்யுமாறு கோரியுள்ளார்.

சிசுவொன்றைப் படுகொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் ரிசானாவிற்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவரது மரண தண்டனையை தடுத்து நிறுத்த சகல வழிகளிலும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

பிள்ளை பராமரிப்பு பற்றிய தெளிவின்றியே ரிசானா சிறு வயதில் வீட்டுப் பணிப்பெண்ணாக கடமையாற்றியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# பராக்கிரம சமுத்திரத்தின் 4 வான் கதவுகள் திறப்பு

(கொழும்பு)

ஸ்ரீபராக்கிரம சமுத்திரத்தின் நான்கு வான் கதவுகள் கடந்த 22 ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இச்சமுத்திரத்தின் நீர்மட்டம் பெய்த மழை காரணமாக உயர்ந்துள்ளதையடுத்தே நான்கு வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் இருவான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. அதனால் நீர்த்தேக்கங்களுக்கு அருகாமையில் இருக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-2)

# நன்றி நவிலல்

கடந்த 18 / 12 / 2012 செவ்வாய்க்கிழமை இரவு அமரத்துவமடைந்த அமரர் சபாரத்தினம் கந்தையா ஓய்வு பெற்ற ஆசிரியர் அவர்களின் பிரிவுத்துயர் செய்தி கேட்டு உடன் ஓடி வந்து துயரில் பங்கு கொண்ட அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், தொலைபேசி வாயிலாகவும் தமது அனுதாபத்தை தெரிவித்த நண்பர்கள், கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரித்து வெளியீடு செய்த கைதடி சித்த ஆயுர்வேத உத்தியோகத்தர்கள் அனைவருக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலிகள் செய்த யாழ்.திறந்த பல்கலைக்கழக அனைத்து உத்தியோகத்தர்களுக்கும், யாழ்.பொதுசன நூலக உத்தியோகத்தர் அனைவருக்கும், நோயுற்று இருந்தபோது உரிய நேரங்களில் பல உதவிகளைச் செய்தவர்களுக்கும், தோளோடு தோள் நின்று உடன் ஓடோடி வந்து இல்லத்திற்கு வருகை தந்து சிகிச்சைகள் கொடுத்த வைத்தியருக்கும், இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலிகள் செலுத்திய அன்புள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
அன்றே மறப்பது நன்று"

(1319)

நீங்கா நினைவுகளுடன்,
சேமபராபரன் (மகன்)
மஹேந்திரநாயகம் (மகன்)
கிருபாகுமாரி (மகள்)
சாந்தகுமாரி (மகள்)

108/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

WESTERN UNION® MONEY TRANSFER

தொடர்ந்தும் உங்கள் சேவையில்

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடுபுடைவைகள். CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.No:-0212225392

(கி-17)

# சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்

60 A, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்

## சித்திரப்போட்டி

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தினால் வெளியிடப்படும் சிறுவர் செய்திப் பத்திரிகையின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட சித்திரப்போட்டியின் போது பரிசுக்காக தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு,

### கீழ்ப்பிரிவு

1ஆம் பரிசு : ஆ.டினுஜன் யா/ இந்துக் கல்லூரி

2ஆம் இடம் : உ.சாருமதி யா/வட்டு.மத்திய கல்லூரி

3ஆம் இடம் : ச.சன்சிகா வ/வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்

#### ஆறுதல் பரிசுகள்

- கு. மாதங்கி யா/ இணுவில் இந்துக்கல்லூரி
- சி.யுவராஜ் கிளி/ சிவபாத கலையகம் அ.த.க.பாடசாலை
- கே.ஶ்ருங்கனிமொழி கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி
- அ. ஸ்ரீபன் நிலோராஜ் யா/ ஹென்றியரசர் கல்லூரி
- ஜெ.ஜெயசூரியராஜ் யா/ மகாஜனாக் கல்லூரி
- சு.தர்சிகா யா/ இந்து மகளிர் கல்லூரி
- பா.சுகிர்தன் யா/ வரணி இந்து மகா வித்தியாலயம்

### மேல்பிரிவு

1ஆம் இடம்: உ.ராம்கி யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி

2ஆம் இடம்: வி.மனோஜா யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

3ஆம் இடம்: மு. பார்த்தீபன் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

#### ஆறுதல் பரிசுகள்

- பா.கீர்த்திகா யா/ இந்து மகளிர் கல்லூரி
- சி.திசாந் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
- ந.மிதுசன் யா/குடத்தனை கரையூர் அ.த.க.பாடசாலை
- சா.நிறோசா யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்
- ப.ரசாந்தன் முல்/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்
- ஆ.வாசுகி யா/ காரைநகர் தியாகராஜ மத்திய மகா வித்தியாலயம்
- வி.துவாந்தன் யா/ இணுவில் இந்துக் கல்லூரி

(1318)

குறிப்பு: பரிசுக்குரியவர்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் 12/01/2013, காலை 10 மணிக்கு பெற்றோர்/ பாதுகாவலருடன் வந்து எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம் 3<br>உயரம்: 6'<br>கி.பா: 40<br>தொழில்/ தகைமை: விற்பனை முகாமையாளர்<br>தொ. இல: B -836 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:ரேவதி 2<br>உயரம்: 5'2"<br>கி.பா: 54.5<br>தொழில்/ தகைமை:MBBS Dr<br>தொ. இல: G -843 |
| பிறப்பு: 1973 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 4<br>உயரம்: 5'6"<br>கி.பா: 21.25<br>தொழில்/ தகைமை: BA ஆசிரியர்<br>தொ. இல: B -837 | பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5' 3"<br>கி.பா: 43.25<br>தகைமை: A/L<br>தொ. இல: G -844 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம் 2<br>உயரம்: 5' 6"<br>கி.பா: 72, 8இல் செவ்<br>தொழில்/ தகைமை:பொறியியல் பயிலுநர் (நீதிமன்ற ஊழியர்)<br>தொ. இல: B -839 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:பூரம் 2<br>உயரம்: 5' 2"<br>கி.பா: 36.25, 4இல் செவ்.<br>தொழில்/ தகைமை: O/L<br>தொ. இல: G -848 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 27.25<br>உயரம்: 5'5"<br>தொழில்/ தகைமை: சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ. இல: B -840 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>உயரம்: 5' 3"<br>கி.பா: 60.25, 1 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: English Diploma நிர்வாக உத்தியோகத்தர்<br>தொ. இல: G -849 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக்காய்ச்சலால் சிறுமி பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு காய்ச்சலினால் பாடசாலை சிறுமியொருவர் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார். சுழிபுரம் பறாளை வீதியினைச் சேர்ந்த ரி.தர்ஷா (வயது 11) என்ற பாடசாலைச் சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

3 நாட்களுக்கு மேலாக குறித்த சிறுமிக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. குறித்த சிறுமி மூளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் காய்ச்சல் கடுமையாகவே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் அங்கு மாற்றப்பட்ட சில மணி நேரத்திலேயே சிறுமி உயிரிழந்துள்ளார். குறித்த சிறுமிக்கு டெங்கு காய்ச்சல் என யாழ்.போதனாவில் நடைபெற்ற பிரேத பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது டெங்கு காய்ச்சல் மிகத் தீவிரமாக யாழில் அதிகரித்து வருவதனால் எவ்வகையில் காய்ச்சல் ஏற்பட்டாலும் உடனடியாக வைத்தியசாலைக்கு சென்று பரிசோதித்து கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் நிறுவனத்தினர் அறிவுறுத்தியுள்ளனர். (அ-4)



நன்றி: மிரர்.

# தவம் கிடக்கும் குப்பைகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்கு பகுதியில் உள்ள வீதிகளில் உரப்பைகளில் கட்டி வைக்கப்பட்ட குப்பை கூழங்கள் இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் அகற்றப்படாமையினால் அப்பகுதி மக்கள் பல்வேறு தொற்று நோய்களுக்கு ஆளாகலாம் என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அழியும், அழியாத குப்பைகளை தனித் தனியாக உரப்பைகளில் போட்டு குப்பை அகற்றும் வாகனங்கள் வரும் வீதிகளில் வைக்குமாறு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மக்கள் தமது குடியிருப்புகளில் காணப்பட்ட கழிவுப்பொருட்களை உரப்பைகளில் இட்டு வீதியோரங்களில் வைத்தனர். ஆயினும் இதுவரை குப்பைகள் அகற்றப்படவில்லை.

எனவே, இவற்றை உடனடியாக அகற்றி உதவுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)




# மக்கள் மத்தியில் சுமுகநிலை உருவாக்கப்பட்டுள்ளது

## அமைச்சர் டக்ளஸ் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள சுமுக நிலையினை சிலர் தமது அரசியல் நோக்கங்களிற்காக குழப்ப முயற்சிக்கின்றனர் என பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்தார்.

மதுசாரத்திற்கெதிரான இளைஞர் அணி மாநாடு நேற்று முற்பகல் 10 மணியளவில் நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், 30 வருடகால போரின் பின்னர் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சுமுகமான நிலை தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

போரின் போது காணப்பட்ட அசாதாரண சூழ்நிலையினை தற்போது நீங்கள் உணருகின்றீர்களா? அவ்வாறானதொரு நிலை காணப்பட்டால் அதை என்னிடம் கூறுங்கள். அது நிச்சயமாக மாற்றியமைக்கப்படல் வேண்டும். நல்லை ஆதீன முதல்வர் கூட என்னிடம் இங்கு அமைதி நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதனால் தான் இவ்வாறான நிகழ்விற்கு இத்தனை பேர் கலந்து கொள்கின்றார்கள் என கூறியுள்ளார்.

சவப்பெட்டி கடைக்காரன் காலையில் எழுந்தவுடன் என்ன நினைப்பான். இன்று யாராவது சாக வேண்டும் என்றுதான். அதே போல்தான் இங்குள்ள சிலரும் சுமுகமான நிலையினை குழப்பி அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கின்றனர்.

அப்பாவி மாணவர்களினை தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கின்றனர். இதனால் அவர்களுடைய எதிர்காலமானது பாதிப்பை எதிர் நோக்கப் போகின்றது. நாம் மக்களோடு இருந்து இவ்வாறான பிரச்சினைகளை தீர்க்க முயற்சிக்கின்றோம். தற்போது தமிழ் மக்கள் படும் துன்பத்திற்கு நானும் ஒரு வகையில் காரணம் தான் ஏனென்றால், ஆரம்ப காலத்தில் நானும் ஆயுதமேந்தியிருந்தேன்.

எமது மக்களுக்கு அமைதியான, கௌரவமான, ஒளிமயமான எதிர்காலத்தினை பெற்றுக் கொடுப்பது தான் எமது நோக்கம் என்று கூறி தனது உரையினை முடித்துக் கொண்டார். (அ-4)

# நிர்வாக தெரிவை மேற்கொள்ளவும்

(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இளைஞர் கழகங்களின் புதிய நிர்வாகத் தெரிவுகள் இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சகல இளைஞர் கழகங்களும் புதிய நிர்வாகத் தெரிவை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை 0778888352, 0772247902 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும். (அ-3-37)

# வங்கித்துறை வறுமையை ஒழிக்கவே உருவாக்கப்பட்டது

## மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர்





(யாழ்ப்பாணம்)

வறுமையை ஒழிப்பதற்கு உருவாக்கப்பட்ட வங்கித் துறையானது தற்போது தனது நோக்கத்தை மறந்து செயற்படுகின்றது என இலங்கை மத்திய வங்கியின் வட மாகாண முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரி பட்டப்பீடத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வங்கி மற்றும் நிதி பரீட்சையை முடித்துக் கொண்டவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் வங்கித் துறையானது மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. குறிப்பாக யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பு வடக்கு மாகாணத்தில் பல வங்கிகள் புதிதாக தமது கிளைகளைத் திறந்து செயற்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் சுமார் 95 வங்கிக் கிளைகள் இருந்தன. ஆனால், தற்போது 215 வங்கிக் கிளைகள் உள்ளன. யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை 100 வீதம் வங்கித் துறையானது அதிகரித்துள்ளது.

மேலும் வடக்கு மாகாணத்தில் 30 இற்கும் மேற்பட்ட நிதிநிறுவனங்கள் இயங்குகின்றன. இருப்பினும் வங்கிகள் உருவானதன் நோக்கம் வறுமையை ஒழிப்பதே என்பதை மறந்து செயற்படுகின்றன எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

அத்தோடு கடன் உதவிகள், சுயதொழிலுக்கான உதவிகள், வேலை வாய்ப்பினை அதிகரிப்பதற்கான உதவிகளை வழங்கி வறுமையை ஒழிக்க பாடுபட வேண்டும் எனவும் இலங்கை மத்திய வங்கி அவ்வாறான உதவிகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கை மத்திய வங்கியானது 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 10 பில்லியன் ரூபாவை வடமாகாணத்தை சேர்ந்தவர்களின் நலன் கருதி கடனாக வழங்கியுள்ளது. இருப்பினும் கடன் உதவியினைப் பெற்றவர்கள் அதனை மீளச் செலுத்துவதற்கு தவறுகின்றனர் எனவும் குற்றம் சாட்டினார். (அ-6)

# மாநகரசபையின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் இவ் ஆண்டுக்கான டிசெம்பர் மாத மாதாந்தப் பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகரசபை செயலாளர் தா.தர்மரட்ணம் அறிவித்துள்ளார். (அ-9)

# மணிவாசகர் விழாவில் சொற்பொழிவுகள்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையினால் நடத்தப்படும் 58 ஆவது ஆண்டு மணிவாசகர் விழா நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை வரை ஈழத்து சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள கம்பன்கவிச் செல்வர் ச.அருணசடேசன் மூன்று நாட்களிலும் மாலை 6 மணிக்கு சொற்பொழிவாற்றவுள்ளார். விளைந்தது பூச்சு, அல்ல ஆண்டாய், வானவரும் அறியா மலர்ப்பாதம் எனும் தலைப்புகளில் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சம்பந்தனின் நேர்மைக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சி

## சுமந்திரன் எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் நேர்மையான, தியாகமான அரசியலுக்கு களங்கம் கற்பிக்கும் விதத்தில் உள்நாட்டு வாதிகளும் வெளிநாட்டு விசமிகளும் அவருக்கு எதிராக பொய்ப்பிரசாரம் செய்வது அர்த்தமற்ற செயலாகும் என யாழ்.மாவட்ட பா.உ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இரா.சம்பந்தன் இராணுவப் பிரசன்னத்தை வடக்கு, கிழக்கில் இருந்து இல்லாதொழிக்க வேண்டும். மற்றும் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்றும் நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் கூறியுள்ளார், கூறி வருகின்றார் என்ற பொய்ப் பிரசாரத்தை உள்நாட்டில் உள்ளவர்களும் வெளிநாட்டில் உள்ளவர்களும் தெரிவித்து வருகின்றனர்.

இது சம்பந்தனின் நேர்மையான அரசியலுக்கு சேறு பூசும் ஒரு விடயமாகும். அவரின் தியாகத்தனமான அரசியல் போக்கை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். தலைவர் சம்பந்தன் கடந்த வாரம் நாடாளுமன்றில் ஆற்றிய உரை பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. அதைப்படித்தால் உண்மைநிலை புரியும்.

விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் எனக் குற்றஞ்சாட்டி இன விடுதலைக்காக போராடியுள்ளவர்களை பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக் கொண்டு அமெரிக்கா, கனடா, இந்தியா போன்ற நாடுகள் அவ் அமைப்பின் மீது தடை விதித்தன.

இதன் காரணமாக விடுதலைப்புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பென உலகத்திற்கு எடுத்துக்காட்டப்பட்டது என்ற இந்த உண்மை நிலையை இரா.சம்பந்தன் எடுத்துக்கூறினாரே தவிர விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்ற அர்த்தம்பட அவரது உரை இருக்கவில்லை. எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் அவ்வாறு கூறியது கிடையாது.

இதுபோலவே இராணுவப் பிரசன்னம் வடக்கு, கிழக்கில் குறைக்கப்பட வேண்டும் என்று கோருகிறாரே தவிர அது முற்றாக நீக்கப்பட வேண்டும் என அவர் கோரவில்லை என்ற இன்னுமொரு குற்றச்சாட்டு இவர்களால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இக் குற்றச்சாட்டுப் பொருத்தமற்றதாகும்.

வடக்கில் 15 இராணுவப் படையணிகள் நிலை கொண்டுள்ளது. முழு நாட்டிலுமே 20 படையணிகள் உள்ளபோது வடக்கில் மாத்திரமே 15 பிரிவுகள் நிலை கொண்டிருப்பது இந் நாட்டில் போர் இன்னமும் முடியவில்லை என்ற அர்த்தமா? எனவேதான் வடக்கில் மேலதிகமாக நிலை கொண்டிருக்கும் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும்.

அங்கு வாழும் மக்களின் இயல்பு வாழ்வுக்கு இப் பிரசன்னம் குந்தகமாக இருக்கின்றது என எடுத்துக்கூறி வருகின்றார். வடக்கில் இருந்து இராணுவத்தை முற்றாக அகற்ற வேண்டும் எனக் கோருவதை எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

சர்வதேசமும் இதை நியாயமான கோரிக்கையாகக் கருதாது. அதேவேளை, இலங்கை அரசாங்கமும் உடன்படப் போவதில்லை.

இராணுவப் பிரசன்னத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று கோரவில்லை எனக் கூறுவது அர்த்தமற்ற குற்றச்சாட்டாகும். இது அவரின் உரையை திரிவுபடுத்தும் செயலாகும் என அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார். (அ-2)

## அருணோதயம் இன்னிசை மாலை

(மல்லாகம்)

அளவெட்டி அருணோதயாக்கல்லூரியின் வளர்ச்சிக்காக வருடம் தோறும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களினால் நடத்தப்படும் அருணோதயம் இன்னிசை மாலை இசை நிகழ்வு இம்முறை யாழ்ப்பாணம், கொழும்பு, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

தென்னிந்திய திரைப்படப் பாடகர் மது பாலகிருஸ்ணன் மற்றும் விஜய் ரீ.வி புகழ் சுப்பர் சிங்கர்ஸ் கலந்து சிறப்பிக்கவிருக்கும் இன்னிசை மாலை நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி கொழும்பு கதிரேசன் மண்டபத்திலும் ஏப்ரல் 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும் யூன் முதலாம் திகதி அவுஸ்திரேலியா மண்ணில் சிட்னி நகரிலும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இசை ஆர்வலர்கள் அனைவரும் கலந்து சிறப்பிப்பதுடன் கல்லூரியின் வளர்ச்சிக்கு கைகொடுக்குமாறும் பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது. (அ-9-2)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ நடவடிக்கை

## தீர்மானித்தது பொ.சு.ப. சங்கம்

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள மக்களுக்கு உதவி செய்வதற்கென நடமாடும் சுகாதார சேவையை நடத்த பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வேறு பகுதிகளில் இருந்து பொது சுகாதார பரிசோதகர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுத்தமான குடிநீர் விநியோகித்தல், கிணறுகளுக்கு குளோரின் இட்டு சுத்தப்படுத்தல் போன்ற திட்டங்களை செயற்படுத்துவதாக அவர் கூறினார்.

மழை, வெள்ளம் குறைந்து வரும் நிலையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தொற்று நோய் அபாயம் காணப்படுவதால் அதனைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# நீதிமன்ற கட்டமைப்பு வரம்புமீறி அதிகாரத்தை பயன்படுத்துகிறது

## அமைச்சர் வாசுதேவ குற்றச்சாட்டு

நீதிமன்றக் கட்டமைப்பு வரம்பு மீறி அதிகாரத்தைப் பயன்படுத்துவதாக தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

நீதிமன்றத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் இடையிலான முரண்பாட்டு நிலைமையை ஜனநாயக விரோத சக்திகள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்றக் கட்டமைப்பு தனது எல்லைகளை புரிந்து கொண்டு செயற்பட வேண்டியது அவசியமானது. பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது அரசியல் சாசன உரிமைகளை விட்டுக்கொடுக்கக் கூடாது. பிரதம நீதியரசர் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அதற்கு தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

எனினும் நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பிலான நியதிகளுக்கு உட்பட்ட வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தாம் இதனை சுட்டிக்காட்டியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற நீதவான்களைக் கொண்டு விசாரணை நடத்தி அதன் பின்னரே பாராளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை செய்ய வேண்டுமென கோரியிருந்ததாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)



யாழ்.அரியாலை காந்தி முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வு அரியாலை காந்தி சனசமூக நிலைய அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்வினைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# உயர் கல்வி அமைச்சிடம் சம்பள உயர் குறித்து ஆவணங்கள் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு சம்பள உயர்வு குறித்த ஆவணங்கள் உயர் கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆவணங்கள் கடந்த 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் கலாநிதி டெரன்ஸ் மதுஜித் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து இந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி தமது சம்பள பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் எதிர்வரும் நாட்களில் சுற்றறிக்கை வெளியிடப்படும் என அவர் கூறினார். (அ-2)

# மல்வத்து ஓயா பெருக்கெடுப்பு இரு கிராம மக்கள் இடப்பெயர்வு

மன்னார் மாவட்டத்தில் மல்வத்து ஓயா பெருக்கெடுத்துள்ளதன் காரணமாக அதனை அண்டிய இரண்டு கிராமங்களை சேர்ந்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்லுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுள்ளது.

இதன்படி ஏற்படும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்படக்கூடிய மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட தம்பணைக்குளம் மற்றும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மடுக்கரை ஆகிய கிராமங்களின் மக்களுக்கே அரசாங்க அதிபர் ஊடாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் இது குறித்து உறுதிப்படுத்தியுள்ளார். (அ-2)




ஈழத்து சிதம்பரத்தில்

திருவெம்பாவை காண வாரீர்...

சிதம்பர தரிசனம்

திருவாசக உட்பொருளாய் திகழ்பவன்

திருவாசக உட்பொருளாய் திகழ்பவனை
தேமதுரத் தமிழ் உண்டு மகிழ்பவனை
வருமிடரை வையத்தில் போக்கி அருள்பவனை
வந்திக்கு கூலிகொண்டு பங்கு அடைத்தவனை
குருவாக குருந்த மர நிழலில் அமர்ந்தவனை
குமிண்சிரிப்பால் முப்புரங்கள் எரித்தவனை
அருமறையாம் திருமுறையை நாயன்மார்க்கு அருளியவனை
ஆடலிலே வல்லவனை ஆண்டிகேணி ஐயனுடன் அர்ச்சித்து பாடுவமே!

- மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

... சிதம்பரத்தில் இன்று (24.12.2012)திங்கட்கிழமை 06ஆம் நாள் உற்சவம்

C-1813


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்கள் இல்லாத சமூகம் விடுதலை பெற்றுக் கொள்ளாது

## செல்வராசா எம்.பி. தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

இளைஞர்கள் இல்லாத ஒரு சமூகம் விடுதலையைப் பெற முடியாது. மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி கருத்துக்களைச் சொல்ல முடியாது. இளைஞர்கள் இல்லாத ஒரு நிறுவனம் அல்லது சமூகம் பூரணத்துவம் அடைய முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணி அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இளைஞர் இல்லாத ஒரு சமூகம் விடுதலைபெற முடியாது.மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி கருத்துக்களைச் சொல்ல முடியாது.இளைஞர்கள் இல்லாத ஒரு நிறுவனம் அல்லது சமூகம் பூரணத்துவம் அடைய முடியாது.அந்த வகையில் 1949 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட போது முன்னின்று உழைத்தார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆனால் அதற்குப் பிற்பட்ட காலத்தில் தமிழினத்துக்கு ஏற்பட்ட நேரடியான இழப்புக்கள் காரணமாக இளைஞர்களின் செயற்பாடுகளை படிப்படியாக குறைக்கும் நிலைமை ஏற்பட்டது.

சாத்வீக போராட்டம், அதற்கு பின் வந்த ஆயதப் போராட்டம் போன்றவற்றில் இளைஞர்கள் அரசாங்கத்தினால் தாக்கப்பட்டமையும் ஆயுதப்போர் முடிவடைந்தாலும் கூட கைது செய்யப்பட்ட எமது இளைஞர்கள் பலர் சிறைச்சாலைகளில் வாடிக்கொண்டிருக்கிறார்கள்.

அரச படையினரால் இரவோடு இரவாக அவசர காலச்சட்டத்தின் கீழ் இளைஞர்கள் கைது செய்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறைச்சாலைகளில் அடைத்துள்ளனர். இதை நாம் சொன்னால் அவர்களுக்கு கசப்பு வார்த்தை. யதார்த்தத்தைச் சொல்ல முடியாத நிலையிலேயே எமது தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு மக்களின் கருத்துக்களின் அடிப்படையில் தமது சிபாரிசுகளை முன்வைத்தன. அதன் அடிப்படையில் 9 ஆம் அத்தியாயத்தில் சுமார் 185 சிபாரிசுகள் கூறப்பட்டுள்ளன.

எமது மக்கள் முள்ளிவாய்க்காலிலேயே அனுபவித்த கஷ்டங்கள் எத்தனை ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதையெல்லாம் எத்தனை மக்கள் சாட்சிகளாக கூறியுள்ளார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் உண்மைகளை பேசினால் அரசாங்பத்திற்கு கோபம் வருவதற்கு முன்னர் வடக்கு கிழக்கிலே வாழ்கின்ற அரசாங்கத்தை ஆதரிக்கின்றவர்களுக்கு கோபம் வருகிறது.

கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு தனி ஒரு இனத்துக்குச் சொந்தமான மாவட்டமாகவே அல்லது மாகாணமாகவே இருக்கக்கூடாது என சிபாரிசு செய்துள்ளது என தெரிவித்துள்ளார். (அ-2)

# ஒந்தாச்சி மடத்தில் இந்தியர்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஒந்தாச்சிமடம் பகுதியில் இரு இந்திய பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு ஒந்தாச்சிமடம் பகுதியில் இரு இந்திய பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து ஆடை விற்பனையில் ஈடுபட்ட இந்தியர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்கென பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

# குஞ்சுக்குளம் வீதியில் போக்குவரத்து பாதிப்பு

(மன்னார்)

மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் தொங்குபாலத்திற்கு அருகாமையில் உள்ள பிரதான வீதியில் சுமார் 12 அடிக்கு மேல் ஆற்று நீர் பாய்ந்து கொண்டிருப்பதாக குஞ்சுக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை லக்டன் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதனால் வாகனம் மற்றும் மக்களின் போக்குவரத்துக்கள் பெருமளவில் பாதிப்படைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.மடு பிரதான வீதியில் இருந்து பெரிய குஞ்சுக்குளம், மாதா கிராமம், பெரிய முறிப்பு ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதிகளில் தற்போது திருத்த வேல்லைகள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

அப்பகுதியூடாக காணப்படும் கட்டுக்கரை குளத்தின் துருசு பல வருடங்களாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.இந்த நிலையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுளள மழை வெள்ளம் காரணமாக குஞ்சுக்குளம் பகுதியில் உள்ள ஆறு பெருக்கெடுத்துள்ளது.

ஆற்று நீர் 12 அடிக்கு மேல் பாய்ந்து கொண்டிருக்கின்றது. இதனால் வாகனம் மற்றும் மக்களின் போக்குவரத்துக்கள் தற்போது பெரிதளவில் பாதிப்படைந்துள்ளதாக குஞ்சுக்குளம் பங்குத்தந்தை மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பழைமை வாய்ந்த பாடசாலைகள் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன

## வளப்பங்கீட்டை கோருகின்றார் சந்திரகுமார் எம்.பி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கல்வி மேம்பாட்டுக்கு பெருமளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளபோதும் நூறு ஆண்டுகளுக்கு மேல் பழைமைவாய்ந்த பாடசாலைகள் இன்னமும் பின்தங்கிய நிலையிலேயே இயங்கி வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும்.இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

பாடசாலைஅபிவிருத்தி செய்யும் பொறுப்பு அரசிற்கு மட்டுமே உண்டு என்ற எண்ணம் கல்விச்சமூகத்திடமிருந்து மாற்றமடைய வேண்டும்.அப்போதுதான் பாடசாலைகள் இயல்பான முன்னேற்றத்தை எட்டும்.யாழ். மாவட்டத்தில் கல்வி அபிவிருத்திக்காக வருடாந்தம் பல கோடி ரூபாய்கள் செலவு செய்யப்பட்டு வருகின்றன.கடந்த வருடம் மட்டும் சுமார் ஆயிரத்து நூறு இலட்சம் ரூபா வரையிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது.ஆனால் இவ்வாறான பாடசாலைகள் தொடர்ந்தும் அடிப்படை வசதிகளற்ற நிலையிலேயே இயங்கி வருகின்றது.

அத்தோடு மாவட்டத்திலுள்ள சில கல்வி வலயங்களில் ஆசிரியர் தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான பின்தங்கிய பாடசாலைகளில் ஆசிரிய வளப்பற்றாக்குறை தொடர்ந்த வண்ணமே உள்ளன.

எனவே இந்நிலைப்பாடுகள் மாவட்டத்திற்குள்ளேயே வளப்பங்கீடுகளின் சீரற்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

யுத்தப் பாதிப்புக்களை எதிர்கொண்டு கல்வித் தளத்தை முற்றாக இழந்து நிற்கும் வன்னி மாவட்டங்களின் மாணவர்கள் ஆசிரியர் வளங்களுக்காக ஏங்கி காத்திருக்கின்ற நிலைமையையும் அதற்கான பதிலை வழங்க வேண்டிய மாவட்டமாக குறிப்பாக யாழ். மாவட்டம் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.எனவே இந்த சமூக பொறுப்பை கல்விசார் அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# வவுனியாவில் தொடர்மழை; இடம்பெயர்ந்தனர் மக்கள்



(பூந்தோட்டம்)

வவுனியாவில் தொடர்ந்தும் பெய்து வரும் மழை காரணமாக தாழ் நிலப்பிரதேசங்களை அண்டிய பகுதி கிராமங்கள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்பு தேடி மாற்றிடங்களுக்கு சென்றுள்ளதுடன் அவர்களுக்கான நிவாரண வசதிகள் பிரதேச செயலகங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருநாவற்குளம், பத்தினியார், மகிழங்குளம், தாண்டிக்குளம், கந்தசாமி நகர், வீடியா பாம் ,பூந்தோட்டத்தின் சில பகுதிகள் உட்பட அக்ரோபுர, மாமடுவ, கழுகுண்ணா மடு, விக்கிரமபுர ஆகிய பிரதேசங்கள் அதிகளவில் வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளன.

இதேவேளை வவுனியா பிரதேசத்தில் தொடர்ச்சியாக இரண்டாவது நாளாக பெய்து வரும் கடும் மழை காரணமாக குளங்கள் நிரம்பி வழிந்து வருவதுடன் விவசாய நிலங்களும் பாதிப்படைந்துள்ளன.

அத்துடன் வவுனியாவில் உள்ள அனைத்து குளங்களும் நிரம்பியுள்ளதாகவும் விவசாய திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

வவுனியாவில் இருந்து பூவ ரசன் குளம் ஊடாக செட்டிக்குளம் செல்லும் வீதி வெள்ளம் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும் வவுனியா மாவட்ட செயலக தகவல்கள் தெரிவித்ததுடன் பாவற் குளத்தின் 6 வான் கதவுகளும் திறந்து விடப் பட்டுள்ளதால் அப்பகுதி மக்களை பாதுகாக் பாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

நொச்சிமோட்டை பாலத்தின் மேலாக வெள்ள நீர் வழிந்தோடுவதன் காரணமாக ஏ- 9 வீதியிலான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.இவ் வீதியூடாக பாரிய வாகனங்கள் மாத்திரமே பயணம் செய்யக்கூடியதாக உள்ளதுடன் சிறியரக வாகனங்கள் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கிராமங்களுக்கான போக்குவரத்து தடைப்பட்டுள்ளமையால் அப்பகுதி மக்கள் மாற்று வழியை பயன்படுத்தி வருகின்றனர். (அ-9-266)

# பெண்கள் துஷ்பிரயோகம்; விசாரணைகள் துரிதம்

சுகாதார அமைச்சின் கட்டுப்பாட்டில் இயங்கும் நிறுவனங்களில் பணிபுரியும் மூன்று பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை பொறுப்பு பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமையவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வைத்திய விநியோக பிரிவு மற்றும் தேசிய வைத்தியசாலை ஆகியவற்றில் வைத்து குறித்த மூன்று பெண்களும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட பெண்கள் சுகாதார அமைச்சரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.இதன் பின்னரே சுயாதீன விசாரணைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 02.12.2012-20.06.2014

ஜோதிடக் கலைமணி, சிவல்புரி சிங்காரம்

# சிம்மம்




**மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்**

**மூன்றாமிடத்தில் இராகுவர முன்னேற்றங்கள் தேடிவரும்! 75/100**

**நினைத்ததை நினைத்தபடியே முடித்துக் காட்டும் சிம்ம இராசி நேயர்களே!**

நவக்கிரகங்களில் இராஜ கிரகம் என்று போற்றப்படுவதுதான் உங்கள் இராசிநாதனான சூரியன். எனவே, இராஜாங்க யோகத்தைப்பெற்ற நீங்கள் அரசாளும் யோகமும் அதிகார தோற்றமும் பெற்றிருப்பீர்கள். பொன்னையும் பொருளையும் பெரிதாகக் கருதுபவர்களுக்கு மத்தியில் புகழ் ஒன்றையே பெரிதாக நினைத்து செயற்படுவீர்கள்.



துணிவே துணை என்று வாழ்பவர்கள் நீங்கள். நிர்வாகத் திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள் நீங்கள்தான்.

சமூகத்தில் உங்களுக்கென்று தனியிடம் உண்டு. பேச்சாற்றல் உங்கள் பிறவிக் குணம். விட்டுக் கொடுக்காத தன்மை உங்கள் இரத்தத்தில் ஊறியது. பணத்தைச் செலவழித்தாலும் உங்கள் குணத்தை மட்டும் மாற்ற இயலாது. நீதியை நிலைநாட்ட உரக்கவும் பேசுவீர்கள். நேசிக்கும்போது அமைதியாகவும் பேசுவீர்கள். இனத்தார், மதத்தார் என்று பாராமல் எல்லோருக்கும் உதவும் உங்களுக்கு இந்த இராகு-கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களை வழங்கப் போகிறது என்பதைப் பற்றி பார்ப்போம்.

**முயற்சிகளில் வெற்றிதரும் 3 ஆம் இடத்து இராகு!**

**ஒளிமயமான வாழ்வு தரும் 9ஆம் இடத்து கேது!**

இதுவரை விருச்சிகத்தில் சஞ்சரித்து வந்த இராகுவும் இடப ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான் வெளிப் பயணத்தில் 02.12.2012 முதல் பின்னோக்கி வந்து உங்கள் பிரச்சினைகளைத தீர்க்கவும் பிரபல்யயோகத்தைக் கொடுக்கவும் போகிறார்கள்.

3 ஆம் இடத்து இராகு முன்னேற்றம் தருமா? இல்லை முட்டுக்கட்டை போடுமா என்பதையும் ஒன்பதாம் இடத்துக் கேது பொன், பொருளைக் கொடுக்குமா, புகழைச் சேர்க்குமா என்பது பற்றியும் நீங்கள் அறிந்து கொள்ள ஆவலாக இருப்பீர்கள்.

உங்கள் சுயஜாதகத்தில் இராகு, கேதுக்கள் எங்கு இருக்கிறார்கள்? அதன் பாதசார பலன் என்னன? இராகு திசை உங்களுக்கு நடக்கிறதா என்பதைப் பற்றியெல்லாம நீங்கள் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். காரணம் மூன்றாமிடம் என்பது வெற்றிகள் ஸ்தானமாகும். ஒருவருக்கு வாழ்வில் வெற்றிமீது வெற்றி வந்துசேர வேண்டுமானால் 3ஆம் இடம் பலம்பெற்றிருக்க வேண்டும். அத்தோடு செயல் ஸ்தானாதிபதியும், தன-லாப ஸ்தானாதிபதியும் பலம் பெற்றிருந்தால் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய இயலும். நீங்கள் சொல்வதை இந்த உலகம் கேட்கும்.

எனவே, வெற்றி வாய்ப்புகளை வீடு தேடி வரவழைக்கும் இந்த இராகு, கேது பெயர்ச்சி வந்த ஒரு மாதத்திற்குள் யோகம் பலம்பெற்ற நாளில் உங்களுக்கு அனுகூலம் தரும் ஸ்தலத்தை தேர்ந்தெடுத்து சர்ப்ப சாந்தியை செய்வது நல்லது. வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நேரமிது.

தொழில் வளர்ச்சிக்கு 3ஆம் இடத்து இராகு வித்திடும். தொகை எதிர்பார்த்தபடி வந்துகொண்டேயிருக்கும். வழிவழியாக வந்து வழிகாட்டியவர்கள் புதிய பாதையைக் காட்டுவார்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழப்போகிறீர்கள். வீணான மனக் கசப்பும் விரயங்களும் இனி மாறும். தேனான வாழ்க்கைக்கு

# தேனான வாழ்க்கைக்குத் திரவிய இலாபம் கிடைக்கும்

திரவிய இலாபம் கிடைக்கும். பிரபலஸ்தர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல காரியங்களை முடித்துக் கொடுப்பர். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். உடனுக்குடன் நீங்கள் தீட்டிய திட்டங்கள் நிறைவேறப்போகின்றன.

என்ன இருந்தாலும், 3 ஆம் இடம் சகோதர ஸ்தானம் என்பதால் உடன் பிறப்புகள் வழியே ஒருசில பிரச்சினைகள் வந்து அலைமோதும். பூர்வீக சொத்துக்களில் பாகப்பிரினை சம்பந்தமாகவும் இருக்கலாம். பணம் கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாகவும் இருக்கலாம். இந்தநேரத்தில் நீங்கள் அவர்களின் கோபத்திற்கு ஆளாகாமல் அனுசரித்துச் செல்வது நல்லது.

பொதுவாக 3 ஆம் இடத்தில் இராகு சஞ்சரிக்கும்பொழுது மிகுந்த நற்பலன் கள் வந்துசேரும் என்றே சொல்ல வேண்டும். தொட்டதெல்லாம் பொன்னாகும் என்றே கருதலாம். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். பங்காளிப் பகை மாறும். எப்பொழுதோ வாங்கிப் போட்ட, இடத்திற்கு மதிப்பு அதிகரிக்கும். இப்பொழுது அதை விற்று விட்டு பூர்வீக இடத்தில் வீடு காட்டத் தொடங்குவீர்கள். தைரியமும் தன்னம்பிகையும் கூடும். முடியாது, தெரியாது என்ற வார்த்தை உங்கள் அகராதியை விட்டு அகலும். இழந்தவற்றை மீண்டும் பெற எடுத்த முயற்சிகள் ஒவ்வொன்றும் பலன் கொடுத்துக் கொண்டே இருக்கும். நிரந்தர உத்தியோகத்திற்காக ஏற்பாடு செய்தவர்களுக்கு நிகழ்காலத்தில் நல்ல தகவல்கள் வந்துசேரும்.

நீண்டநாட்களாக அரச வேலை கிடைக்கவில்லையே என்று அங்கலாய்த்தவர்களுக்கு இப்பொழுது அரசுவேலை கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். தொழில் புரிவோருக்கு மேன்மை. இராகுவின் பார்வை பலத்தால் தொட்ட காரியங்களில் வெற்றி. கூட்டுத்தொழிலில் உடன் பிறப்புகளுக்கு இருந்த பங்கினைக் கொடுத்துவிட்டு, தான் தன் குடும்பத்திற்கென்று பங்கு வைத்துக்கொண்டு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள்.

எதிரிகளின் யுக்தியை உங்கள் புத்தி நுட்பத்தால் முறியடித்து விடுவீர்கள். கதிர் வரும் முன்னதாகவே எழுந்து மதி வரும்வரை இரவு, பகல் பாராமல் உழைத்த உழைப்புக்கேற்ற முன்னேற்றம் இப்பொழுது உங்களுக்குக் கிடைக்கப்போகிறது.

**ஒளிமயமான வாழ்வு தரும் 9ஆம் இடத்துக்கேது!**

ஜாதகத்தில் மிக முக்கியமான இடம் 5 ஆம் இடமும் ஒன்பதாம் இடமும்தான். 5ம் 9ம் நன்றாக இருந்தால், மிஞ்சும் பலன் தரும் என்பார்கள். எனவே, மிஞ்சுகின்ற அளவுக்கு பொருளாதார வளர்ச்சியைக் கொடுக்கப் போவது இந்த 9 ஆம் இடத்துக் கேதுவின் ஆதிக்கம்தான்.

கேதுவின் ஆதிக்கத்தால் பூர்வீக சொத்துக்களில் இலாபம் கிடைக்கும் வாய்ப்பு உருவாகும். வங்கிகளில் சேமிப்பு உயரும். பல வங்கிகளில் வைப்புநிதி வைத்து வாழ்க்கைத் தேவைகளை பூர்த்திசெய்து கொள்வீர்கள். பெற்றோர் வழியிலும் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும்.

பிரியம் நம்மிடம் காட்டாமல் நம்மோடு கூடப்பிறந்தவர்களுடன் காட்டுகிறார்களே என்ற கவலை இனி அகலும். உடன்பிறப்புகளிடம் காட்டும் பாசத்தைவிட உங்களிடம் பெற்றோர்கள் காட்டும் பாசம் மேலோங்கியிருக்கும். தூரதேசத்திலிருந்து வரும் தகவல் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும். காரசாரமாகப் பேசியவர்கள் இனி கனிவோடு பேசுவர்.

[illegible]ாக நீங்கள் இனி விநாயகப் பெருமானை தொடர்ந்து வழிபடவேண்டும். அப்பொழுதுதான் பாரம் குறைந்து பணத்தேவைகள் பூர்த்தியாகும். ஈர மனதோடு பழகுபவர்களின் எண்ணிக்கையும் உயரும். சேர, சோழ பாண்டியர்களைப்போல நீங்களும் தேசத்தில் முதன்மை பெற்று வாழ இயலும்.

பயணங்கள் மூலம் புதிய பழக்கங்கள் வந்துசேரும். வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வாங்கும் வாகனங்களில் எண் பார்த்து வாங்கினால், தேங்கிய காரியங்கள் கூட துரிதமாக நடைபெறும். பழைய வாகனங்களை பழுது பார்த்து வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் ஏற்படாது. அதை கொடுத்து விட்டு புதிதாக வாங்கலாம் என்று நினைப்பீர்கள்.

ஏழரைச் சனி விலகிய இந்த நேரத்தில் வாகன மாற்றம் செய்வதும், தொழில் மாற்றம் செய்வதும் பொருத்தமானதுதான். பொதுவாக பிரார்த்தனைகளின் மூலம் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள இயலும்.

**பாதசாரப்படி இராகு தரும் பலன்கள்!**

துலாம் இராசியில் சஞ்சரிக்கும் இராகு, குரு காலில் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகள் வழியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவெடுக்க வைக்கும். அதன் கடன் கடமைகள் முறையாக செய்து முடிப்பீர்கள். இருப்பினும் திசாபுத்தி பலம் இழந்தவர்களுக்கு பிள்ளைகளால் விரயங்கள் ஏற்படலாம். மற்றப்படி தொழில், பொருளாதாரத்தில் எந்த பாதிப்பும் ஏற்படாது.

இராகு சுயசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது அற்புதமான நேரமாக கருதலாம். அரசியல் செல்வாக்கு மேலோங்கும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் உங்களுக்கு வந்து சேரும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வருமானம் திருப்திதரும். பொதுவாக மக்கள் செல்வாக்கு மேலோங்கும் நேரமிது.

இராகு செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது, புதிய இல்லம் கட்டிக் குடியேறும் வாய்ப்பு கிட்டும். பூமி சேர்க்கை அதிகரிக்கும். சாமி துணையோடு சகல காரியங்களிலும் வெற்றி பெறுவீர்கள். சேமிப்பு உயரும். தெய்வ பிரார்த்தனை ஒவ்வொன்றாக நிறைவேற்றுவீர்கள்.

**பாதசாரப்படி கேது தரும் பலன்கள்!**

கேது மேஷ இராசியில் சஞ்சரிக்கும்பொழுது முதலில் சூரியனின் சாரத்தில் சஞ்சரிக்கிறார். இக்காலம் உங்களுக்கு ஒரு பொற்காலமாகும். இருப்பினும், சூரியன், கேது சேர்க்கைக்கு பரிகாரமாக சர்ப்பசாந்திகளை செய்தால் அற்புத பலன்கள் உங்களுக்கு கிடைக்கும்.

கேது சுக்கிரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். தாராளமாக செலவிட்டு மகிழ்வீர்கள். வீட்டிற்கு தேவையான விலையுயர்ந்த பொருட்களையும் வாங்கும் எண்ணம் கைகூடும்.

கேது சுயசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது கூடுதல் கவனம் தேவை. விரயங்கள் அதிகரிக்கலாம். அறிமுகம் இல்லாதவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். பிறருக்கு ஜாமீன் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

மூன்றாமிடத்து இராகுவால் முன்னேற்றம் கிடைக்கவும் ஒன்பதாமிடத்து கேதுவால் ஒப்பற்ற வாழ்வு அமையவும் அருகில் இருக்கின்ற சிவாலயத்திற்குச் சென்று ஞாயிறு தோறும் சிவன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சுயஜாதகத்தில் இராகு- கேதுக்களின் நிலையறிந்து, சாரபலம் அறிந்து சர்ப்பசாந்திகளை செய்வது நல்லது. மேலும் உமாதேவியை பூக்கொண்டும் பாக்கொண்டும் வழிபட்டு வந்தால் தேக்கநிலை மாறும் தெய்வ அருளால் தித்திக்கும் வாழ்வு அமையும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாய்ப்பந்தல் வீரன்



பாசூருக்குப் புதிதாக வந்த பரமசிவன் இரண்டு ஏக்கர் நிலத்தை வாங்கி விவசாயம் செய்தான். ஐந்து கறவைமாடுகளை வாங்கி பால் வியாபாரமும் செய்துவந்தான்.

அவன் அந்த ஊருக்கு வந்த இரண்டாவது மாதத்திலேயே அவனது மகளுக்கு நல்ல மணமகன் கிடைத்தான். தன் மகளின் திருமணச் செலவிற்கு ஓர் ஆயிரம் ரூபா குறையவே அதை எப்படிப் புறட்டுவது என்று அவன் யோசித்தான். அவன் தான் புதிதாக வாங்கிய நிலத்தின் மீதோ அல்லது மாடுகளின் மீதோ கடன் வாங்க விரும்பவில்லை. யாராவது அந்த ஊரில் தன்னை நம்பி கடன் கொடுக்கத்தயாராக இருக்கிறார்களா என்று பார்க்கலானான். அவனோ அந்த ஊருக்கு புதியவன். அதனால் அவனை நம்பி யாரும் கடன் கொடுக்கமாட்டார்கள் என்று தெரிந்து போயிற்று.

அப்போது அவனது பக்கத்து வீட்டுக்காரன் இந்த ஊரில் உன்னை மட்டும் நம்பிப் பணம் கொடுக்க யாருமே கிடைக்கமாட்டார்கள். உனக்கு மட்டும் அதிர்ஷ்டம் இருந்தால் மாதவன் என்பவனிடம் கேட்டுப்பார். ஒருவேளை கிடைத்தாலும் கிடைக்கலாம். அதோ அவனே இங்கே வந்துகொண்டிருக்கிறான் என்றான். மாதவன் அங்கு வந்து என்ன வேலப்பா பத்தேநாளில் திருப்பி தருவதாகக்கூறி நூறு ரூபாய் வாங்கிக்கொண்டு போனாயே. மாதம் இரண்டாகி விட்டது.பைசா வரவில்லை. நீயும் கண்ணில் படவில்லையே. பணம் கிடைக்கட்டும். நீ எப்போதும் போல என் வீட்டிற்கு வந்து போய்க்கொண்டிரு என்று கூறிவிட்டுப் போனான்.

அப்போது பரமசிவம் தன்னுடைய பக்கத்து வீட்டுக்காரனிடம்

## அம்புலிமாமா கதைகள்

இவனிடம்தான் பணம் கேட்கச் சொன்னாயா? என்றான்.

அவனும் ஆம், நல்லவன்தான். ஒருவனுக்கு உதவமாட்டான் என்று நினைத்தால் கண்டிப்பாக உதவுவான். உதவக்கூடாது என்று நினைத்து விட்டாலோ வெறும் வார்த்தைகளை அள்ளிவீசியே சமாளித்து விடுவான் என்றான். பரமசிவமும் சரி கேட்டுத் தான் 'பார்க்கிறேன். அப்புறம் நடக்கிறபடி நடக்கட்டும் என்றான். பக்கத்து வீட்டுக்காரனும் அவன் ஒருமாதிரி சட்டென வார்த்தைகளைக்கொட்டி விடுவான். அதனால் அவனிடம் பணம் கேட்க எல்லோருமே பயப்படுவார்கள். எதற்கும் நீ கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பதே நல்லது என்றான்.

பரமசிவமும் பணம் கடன் கொடுக்காவிட்டால் அவன் ஏன்வந்து என்னிடம் பேசப்போகிறான். எனக்கு அதிர்ஷ்டம் இருந்தால் பணம் கிடைக் கும் என்றான். பரமசிவன் அன்று மாலை யில் மாதவனை அவனது வீட்டில் பார்த்தான். அப்போது மாதவனும் அவனது தந்தையும் வீட்டுவாசல் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ காரசாரமாகப் பேசிக்கொண்டி ருந்தார்கள். மாதவன் உரத்தகுரலில் நீங்கள் தானே பசுவை வாங்கு வாங்கு என்று பலதடவை கூறினீர்கள். ஆனால் நாம் சொன்னதை நீங்கள் கேட்கவில்லை. இருந்தாலும் உங்களது மனது வேத னைப்படக் கூடாது என்பதற்கா கவே நீங்கள் சொன்னபடி 'செய்தேன் என்றாள்.

அதற்கு அவனது தந்தை மகனே



என்ன செய்யலாம் என்று நீ என்னைக் கேட்டதால்தானே நான் அப்படிச் சொன்னேன். நீ என்ன செய்தாலும் எனக்குச் சந்தோசமே. நீ வீணாக வருந்தாதே என்றான். இதைக்கேட்ட பரமசிவம் உண்மையிலேயே மாதவன் நல்லமனம் படைத்தவன்தான். இவனை ஒருமாதிரியானவன் என்று அந்தப் பக்கத்துவீட்டுக்காரன் ஏன் கூறினான் என்று யோசித்தான்.

அப்போது மாதவன் பரமசிவத்தை பார்த்துவிட்டு ஒ! நீங்கள் வேலப்பனின் பக்கத்துவீட்டுக்காரர் தானே? என்று கேட்டான். பரமசிவமும் ஆமாம், என் பெயர் பரமசிவம். வேலப்பர் உங்களைப் பற்றி புகழ்ந்து கூறியிருக்கிறார். இன்று காலையில் நானும் அவரும் பேசிக்கொண்டிருந்தபோது நீங்கள் அங்கு வந்தீர்கள். அப்போது தான் உங்களை முதன்முதலாக பார்க்கும் பாக்கியம் எனக்கு கிடைத்து என்றான்.

மாதவனும் ஆமாம் அப்போது உங்களுடன் பேசாமல் போனதற்கு வருந்துகிறேன் தவறாக எண்ணி விடாதீர்கள், என்றான்.

அதற்கு பரமசிவம் அதில் தவறாக நான் நினைக்க என்ன இருக்கிறது? உங்களுக்கு என்னைத் தெரியாதே அதனால்தான் நீங்கள் என்னுடன் பேசவில்லை. இப்போது நான் என் தேவைக்காகப் பேச நானே வந்திருக்கிறேன். என் மகளுக்கு திருமணம் நிச்சயமாகி இருக்கிறது. அதற்கான செலவில் ஆயிரம் ரூபாய் குறைகிறது. அதை உங்[illegible] கவே வந்தேன் என்றான்.

அதைக் கேட்ட மாதவன் உடனேயே இப்படிச் சொல்கிறேனே என்று தவறாக நினைக்காதீர்கள்.எனக்கு என்று சில கட்டுப்பாடுகளை நான் விதித்துக் கொண்டிருக்கிறேன். புதிதாக வருபவருடன் நட்பு கடன்கொடுப்பதில் ஆரம்பமாகக் கூடாது என்பது அவற்றுள் ஒன்று. உங்களது தற்போதைய தேவைக்கு கடன் கேட்பது சரியே. அதுவும் ஒரு திருமணம் நடக்கக் கடன் கொடுத்தால் புண்ணியமே கிடைக்கும். ஆனால் நான் வகுத்துக் கொண்ட கட்டுப்பாட்டை மீற முடியாது. எனவே உங்களுக்கு கடன் கொடுக்க முடியாமல் போவதற்கு மிக மிக வருந்துகிறேன். என்றான்

பரமசிவம் என்ன செய்வான் பாவம் முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு வீட்டிற்குத் திரும்பிச் சென்றான். அப்போது அவனது அண்ணன் அருணாசலம் வந்திருந்தான். அவன் பரமசிவத்திடம் தம்பி எதிர்பாராத விதமாக எனக்கு ஓர் இடத்திலிருந்து பணம் கிடைத்தது. இந்தா ஆயிரம் ரூபாய். இதை உன் மகளின் திருமணத்திற்குப் பயன்படுத்திக்கொள் என்றுகூறி பணத்தைக்கொடுத்தான். பரமசிவமும் என் பிரச்சினை நல்லவிதமாகத் தீர்ந்தது. அதனால் இப்போதே கோயிலுக்குப்போய் அர்ச்சனை செய்து விட்டு வருகிறேன் என்று கூறி கோவிலுக்குச் சென்றான். கோயிலில் அவன் மாதவனைச் சந்தித்தான். மாதவனும் நீங்கள் கடவுள் அனுக்கிரகத்தைக் கேட்க வந்திருக்கிறீர்கள். என்னால்தான் உங்களுக்குக்கடன் கொடுத்து உதவ முடியவில்லை. இதற்காக நான் எவ்வளவு வருந்துகிறேன் தெரியுமா? நான் கடன் கொடுக்கவில்லையே என்று எண்ணி நீங்கள் கவலைப்படுவதும் எனக்குத் தெரியும். என்னிடம் பணம் இருந்தும் என் கட்டுப்பாட்டை மீறி உங்களுக்கு உதவமுடியாமல் போயிற்று. நானும் என் மனதை தேற்றிக் கொள்ளவே கோயிலுக்கு வந்தேன் என்றான்.

பரமசிவமும் முன்பின் தெரியாத உங்களிடம் கடன் கேட்டது என்னுடைய தவறுதான். அதற்காக வருந்துகிறேன். நல்லவேளையாக கடவுள் அருளால் எதிர்பாராத விதமாக எனக்குப்



பணம்கிடைத்து விட்டது என்றான். உடனே மாதவன் கடவுள் நல்லவர்களை கைவிடமாட்டார். நீங்கள் எவ்வளவு நல்லவர். உங்களுக்குக் கடன் கொடுத்து உதவமுடியவில்லை என்றுதான் இப்பொழுதும் வருத்த மாக இருக்கிறது என்றான். பரமசி வனும் இதற்காக நீங்கள் வருந்துவதுதான் எனக்கு வேதனையளிக்கிறது. இதுபற்றி இனி நீங்கள் கவ லைப்படா தீ ர்கள் என்று கூறி விட்டு அர்ச்சனையை முடித்துக்கொண்டு சென்றான்.

இதற்குப் பின் பரமசிவம் மாதவனின் துணிக்கடை, மளிகைக் கடை என்ற இடங்களில் சந்தித்த போதும் அவன் தான் கடன்கொடுக்க முடியாது போனதுபற்றியே புலம்பித்தீர்த்தான். பரமசிவம் மாதவனைத் தன் மகளின் திருமணத்திற்கு வருமாறு அழைக்கவே அவனும் வந்தான். அப்போது மாதவன் தான் பரமசிவத்திற்கு கடன்கொடுத்து உதவமுடியவில்லையே என்று புலம்பினான். பரமசிவத்தார் இந்தப் புலம்பலை எவ்வளவுநேரம் வரை தான் கேட்டுக்கொண்டிருக்க முடியும். அந்த சமயத்தில் பரமசிவத்தின் அண்ணன் அங்கு வந்து பரமா! சம்பந்தி கோபமாக இரைந்து கொண்டிருக்கிறார். நீ மாப்பிள்ளைக்கு மட்டுமே தங்கமோதிரம் போட்டாயா? அவர்கள் வழக்கப்படி அவருக்கும் தங்க மோதிரம் போட வேண்டுமாம். இப்போதே ஆயிரம் ரூபாய் வேண்டுமே. அதற்கு நீ எங்கே போவாய்? யாரிடம் கேட்பாய் என்ன செய்யப்போகிறாய்? என்று கேட்டார். பரமசிவமும் இப்படித் திடுதிப்பென்று தங்கமோதிரம் கேட்டால் நான் பணத்திற்கு எங்கே போவேன். கையிலிருந்த பணமெல்லாம் செலவாகிவிட்டதே என்றான்.

அப்போது அவனது அண்ணன் ஏன் கவலைப்படுகிறாய்? இவர்தான் உனக்கு கடன்கொடுத்து உதவமுடியவில்லையே என்று இங்கு வந்தது முதல் புலம்பிக்கொண்டேயிருக்கிறாரே? இவரிடம் கடன்கேள். இப்போது இவர் உனக்கு நன்கு தெரிந்தவர் தானே. அவர்தானே விதித்துக் கொண்ட கட்டுப்பாடுதான் இனி இல்லையே. உன்னை நன்கு அறிவாரே. இவரிடம் இரண்டாயிரம் ரூபாயாக கடன் கேள். சந்தோசத்துடன் உனக்குப் பணம் கொடுப்பார். அவருடைய மனவேதனையும் மறைந்து விடும் என்றான்.

மாதவனும் இவர் சொல்வதும் சரிதான். சிறிதுநேரம் பொறுங்கள். நான் இப்போதே வந்து விடுகிறேன் என்று கூறிவிட்டு நழுவினான்.

இதைக்கண்ட பரமசிவம் மிகுந்த ஆச்சரியத்துடன் இவர் எங்கே போகிறார் என்று அண்ணனிடம் கேட்டான். அவரும் இனிமேல் அவன் நீ இருக்கும் பக்கம் தலை வைத்துக்கூட படுக்கமாட்டான். நீயும் அவன் புலம்பலை கேட்டுக்கேட்டு பொறுத் துக்கொண்டு போக வேண்டிய அவ சியம் இல்லை. இனி அவன் உன்னை பார்க்க வரவும் மாட்டான். அந்த தங்க மோதிர விடயம் அவனை விர ட்டுவதற்காக நான் செய்த கற்பனை என்றான். பரமசிவமும் அப்படியா! இது தானா விடயம்! அவன் வெறும் வாய்ப் பந்தல் வீரனா? எனக்கூறி சிரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் வரி இடாப்புக்கள் சீர்திருத்தப்படவில்லை

## விவசாயிகள் சிரமம்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள காணிக்காரர்களின் நீர்வரி இடாப்புக்கள் சீர்செய்யப்படாமையால் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

காணிகளை பிள்ளைகளுக்கு இரண்டாக பிரித்துக் கொடுத்த போதிலும் நீர் வரி இடாப்பு சீர்செய்யப்படாமையால் கடந்த சிறுபோக காலத்திலும் அதற்கு முன்னரும் ஒரு பங்காகவே விதைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் குடும்பங்களிடையே சச்சரவுகளும் பொருளாதார வீழ்ச்சியும் ஏற்பட்டது.

இது சம்பந்தமாக தற்காலிக நீர்வரி இடாப்பையேனும் செய்து தருவதாக உறுதியளிக்கப்பட்ட போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

எதிர்வரும் அறுவடைக்காலம் தொடங்குவதற்கு முன்னதாக எதிர்வரும் ஜனவரி மாதத்தில் மாவட்ட மட்டத்திலேயே செய்வதற்குரிய வேலைத்திட்டம் என்பதால் நீர்ப்பாசனம் பெறும் கிராம சேவகர் பிரிவில் உள்ள விவசாயிகளையும் அழைத்து இந்த நீர்வரி இடாப்பினை விரைவில் பூர்த்தி செய்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-254)

# மகாபொல புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர்தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் பகல் நேரக்கல்வி பயிலும் 2 ஆம் 3 ஆம் 4ஆம் வருட மாணவர்களில் மகாபொல புலமைப்பரிசில் பெறும் மாணவர்கள் மேற்படி கொடுப்பனவை பெறுவதற்காக எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் நிதிக்கிளையில் (Finance Branch) சமுகமளித்து உரிய ஆவணங்களில் கையொப்பமிடுமாறு நிறுவனக் கணக்காளர் க.இராஜேஸ்வரன் அறிவித்துள்ளார். (ந-9)

# பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் ஆப்கானுக்கு- பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பயிற்றப்பட்ட தொழிலாளர்களை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஸல்மாயி ரசூலுக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கும் இடையிலான சந்திப்பின் போது இந்த விடயங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

ஆப்கானிஸ்தானின் மீள்கட்டுமான பணிகளுக்கு இலங்கையின் பயிற்றப்பட்ட பணியாளர்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஜீ.எல். பிரீஸ் தெரி வித்துள்ளார்.

பொறியியல், மருத்துவம், விவசாயம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதற்கு இலங்கை மாணவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# தே.கை.தொ.அதிகார சபையால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இலங்கை தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட பிரிவினால் கணனிப் பயிற்சி நெறி, மின் இணைப்பு பயிற்சி, குழாய் பொருத்துநர் பயிற்சி, குளிரூட்டல் தொழில்நுட்ப பயிற்சி ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் ஏ.பி.அல்பிரட் அறிவித்துள்ளார்.

ஒரு வருடத்தை கொண்டதாக அமையும். இப் பயிற்சி நெறிக்கு 36 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

கணனிப் பயிற்சிநெறிக்கு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் ஏனைய பயிற்சிநெறிகளுக்கு தரம் 9 இல் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, ஏ-9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறும் மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் 021 2285615, 034 3942824 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (அ-3-15)




★1690-யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துமஸ் இரவு ஆராதனைக்காகக் கூடியிருந்த சுமார் 300 கத்தோலிக்கர்கள் டச்சுப் படைகளினால் அடித்துக் துன்புறுத்தப்பட்டனர்.

★1715-சுவீடனின் துருப்புகள் நோர்வேயை ஆக்கிரமித்தன.

★1777-கிரிட்டிமட்டி தீவு ஜேம்ஸ் குக்கினால் கண்டறியப்பட்டது.

★1851-வோஷிங்டன் டிசியில் காங்கிரஸ் நூலகம் தீப்பிடித்ததில் பெறுமதியான நூல்கள் அழிந்தன.

★1906-ரெஜினால்ட் ஃபெசெண்டென் உலகின் முதலாவது வானொலி நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கினார்.

★1914-முதலாம் உலகப் போர்: கிறிஸ்துமஸ் தினத்துக்காக போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.

★1924-அல்பேனியா குடியரசாகியது.

★1941-இரண்டாம் உலகப்போர்: ஹொங்கொங் ஜப்பானியப் படைகளிடம் வீழ்ந்தது.

★1941-இரண்டாம் உலகப்போர்: மலேசியாவின் சரவாக் மாநிலத் தலைநகர் கூச்சிங் ஜப்பானியரிடம் வீழ்ந்தது.

★1951-லிபியா இத்தாலியிடம் இருந்து விடுதலை பெற்றது. முதலாம் ஐட்ரிஸ் லிபிய மன்னனாக முடிசூடினார்.

★1953-நியூசிலாந்தில் டாங்கிவாய் என்ற இடத்தில் தொடரூந்து மேம்பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் அதில் சென்று கொண்டிருந்த தொடரூந்து ஆற்றில் வீழ்ந்ததில் 153 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

★1954-லாவோஸ் விடுதலை பெற்றது.

★1966-தெற்கு வியட்நாமில் அமெரிக்க இராணுவ விமானம் ஒன்று வீழ்ந்ததில் 129 பேர் உயிரிழந்தனர்.

★1968-மூன்று விண்வெளி வீரர்களை ஏற்றிச் சென்ற அப்பல்லோ 8 விண்கலம் சந்திரனின் சுற்று வட்டத்தில் நுழைந்தது.

★1974-அவுஸ்திரேலியாவில் டார்வின் நகரில் சூறாவளி ட்ரேசி தாக்கியதில் 71 பேர் உயிரிழந்தனர்.

★1979-ஆப்கானிஸ்தானின் கம்யூனிச அரசைக் காப்பதற்காக சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானை முற்றுகையிட்டது.

★1979-ஐரோப்பாவின் முதலாவது விண்கலம் ஆரியான் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

★2005-இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு தேவாலயம் ஒன்றில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

### பிறப்புக்கள்

★1818-ஜேம்ஸ் பிரிஸ்காட் ஜூல், ஆங்கில இயற்பியலாளர் (இ.1889)

★1822-சார்ல்ஸ் ஹெர்மைட், ஒரு பிரெஞ்சு கணிதவியலர் (இ.1901)

★1837-பவேரியாவின் எலிசபெத், ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரியின் அரசி (இ.1898)

★1957-ஹமித் கர்சாய், ஆப்கானிஸ்தான் குடியரசுத் தலைவர்.

★1959-அனில் கபூர், இந்திய நடிகர்.

### இறப்புகள்

★1524-வாஸ்கொட காமா, போர்த்துக்கீச மாலுமி (பி.1460)

★1973-ஈ.வெ.ராமசாமி, திராவிடர் கழகத்தினை தோற்றுவித்தவர். (பி.1879)

★1987-எம்.ஜி.இராமச்சந்திரன், தமிழ் நாட்டின் முதலமைச்சர், திரைப்பட நடிகர் (பி.1917)

★2005- ஜோசப் பரராஜசிங்கம், தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர் (பி.1934)

★2005-பி.பானுமதி, தமிழ்த் திரைப்பட நடிகை (பி.1925)

### சிறப்பு நாள்

★லிபியா- விடுதலை தினம் (1951)

**வாஸ்கொட காமா**



வாஸ்கொட காமா ஒரு போர்த்துக்கேய நாடு காண் பயணி ஆவார். இவர்தான் முதன் முதலாக ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்குக் கடல் வழியைக் கண்டு பிடித்தார். குறைந்த காலத்திலேயேயே இவர் வைசிராய் என்ற பெயரில் 1524 ஆம் ஆண்டு போர்த்துக்கேய ஆளுமைக்கு உட்பட்ட இந்தியாவின் ஆளுநர் ஆனார்.

# அம்பாறை கடலோரம் கடற்பாம்புகள் ஒதுக்கம்

அம்பாறைமாவட்டத்தில் மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள கோணாவத்தை கடலோரம் பல்வகை இனப்பாம்புகள் பெரும் எண்ணிக்கையில் உயிருடன் கரையொதுங்கியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை மாலையிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை காலை வரை சிவப்பு, ஊதா, கறுப்பு என பல்வகை நிறங்களையும் இனங்களையும் கொண்ட பாம்புகளே இவ்வாறு கரை ஒதுங்கியதாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

காட்டு வெள்ளம் காரணமாக வெள்ளத்தினால் காடுகளிலிருந்து கடலுக்கு அடித்து செல்லப்பட்ட பாம்புகளாக இவை இருக்கலாம் என உள்ளூர் மக்களும் மீனவர்களும் நம்புகின்றார்கள். (அ-2)

# பணிப்பெண்ணின் பணப்பை குவைத்தில் பறிபோனது

(கொழும்பு)

குவைத்தில் பணிபுரியும் இலங்கை பணிப்பெண் ஒருவரின் பணப்பை இனந்தெரியாத நபரால் கொள்ளையிட்டுச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்தில் அல்.சுயோக் நகரத்தில் இடம்பெற்ற இக்கொள்ளைச் சம்பவம் குறித்து இலங்கை பணிப்பெண் அந் நகரப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த பையில் கையடக்கத் தொலைபேசி, அடையாள அட்டை 65 தினார் பணம் என்பன இருந்ததாக பணிப்பெண் தெரிவித்துள்ளார்.

அழுதுகொண்டே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த இலங்கைப் பணிப்பெண்ணின் பணப்பையை கொள்ளையிட்டவர்களை பொலிஸார் தேடி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

# வெள்ளத்தில் மூழ்கினார் சித்திர வேலாயுதம்

மகாவலி கங்கை நேற்றைய தினம் பெருக்கெடுத்ததால் திருகோணமலையில் வெருகல் உட்பட பல்வேறு பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெருகல் சித்திரவேலாயுதம் ஆலயத்திலும் வெள்ளம் சுமார் 3 அல்லது 4 அடிக்கு நிற்பதாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல.யின் அதிர்ச்சி வைத்தியம் இந்தியா மிரளுகிறதா?

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் இராஜதந்திர ரீதியான ஒரு நெருடல் நிலவிவரும் சூழலில் இந்தியாவின் கருத்துக்களை இலங்கை புறக்கணித்துவரும் நிலையில் இந்திய நலனுக்கு விரோதமான ஒரு நகர்வை வெளிப்படையாக அது மேற்கொண்டுள்ளது. மிகச்சிறிய அண்டை நாடுகளான மாலைதீவும் இலங்கையும் சீனாவின் நிழலில் இருந்துகொண்டு தன்னைச் சீண்டிப்பார்ப்பதை இந்தியா ஒருபோதும் விரும்பாது. இந்தியாவின் பதில் நகர்வு அல்லது அடுத்த நகர்வு எவ்வாறு அமையப்போகிறது என்பது இப்போது சர்வதேச மட்டத்தில் உன்னிபாக அவதானிக்கப்படும் ஒன்றாக மாறியுள்ளது. ஏற்கனவே சீபா உடன்பாட்டை செய்துகொள்வதற்கு இலங்கையை வலியுறுத்திவரும் இந்தியா, வரும் நாட்கள் அதற்கான அழுத்தங்களை அதிகரிப்பதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

இதுபோன்ற சம்பவம் நடந்துவிடக்கூடாது என்பதற்காகவே சீனாவின் முதலீடு, உதவிகளுக்கிணையாக இலங்கைக்கு இந்தியா உதவிகளை வழங்கி வந்தது. இருந்தபோதிலும். அண்டை நாடான இலங்கை இப்படியொரு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று இந்தியா எதிர்பார்க்கவே இல்லை.

தெற்காசியாவில் தமக்கு எதிரான நகர்வுகளை சீனா இரகசியமாக மேற்கொண்டுவருவதாக நம்பும் இந்தியாவுக்கு அண்மையில் இடம்பெற்ற இரண்டு நிகழ்வுகள் அதிர்ச்சியளிப்பதாக இருந்தன.

1. மாலியிலுள்ள சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப்பணிகளை மேற்கொண்டுவந்த இந்தியாவின் ஜி.எம்.ஆர். நிறுவனத்தின் ஒப்பந்தத்தை மாலைதீவு அரசாங்கம் இரத்துச்செய்த விவகாரம்.

2. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்களுக்கான சுங்கவரியை இலங்கை அரசாங்கம் கடுமையாக அதரிகரித்தது.

இந்த இரண்டு விவகாரங்களுக்கும் பின்னால், சீனாவே இருப்பதாக இந்தியா வலுவாக நம்புகிறது.

500 மில்லியன் முதலீடு பறிபோகிறதே என்பது மட்டும் இந்தியாவினது கவலையில்லை. பிராந்திய வல்லரசான இந்தியாவைப் பற்றியோ, அதன் முடிவைப்பற்றியோ கவலைப்படாமல் சின்னஞ்சிறிய மாலைதீவு அரசாங்கம் ஒரேயடியாக உடன்பாட்டை இரத்துச் செய்ததுதான் இந்தியாவின் கவலைக்கு முக்கிய காரணம். இந்த உடன்பாடு இரத்துச் செய்யப்பட்டது இந்தியவைப் பொறுத்தவரையில் பொருளாதார ரீதியான தாக்கத்தை மட்டும் ஏற்படுத்தவில்லை. அரசியல், இராஜதந்திர, பாதுகாப்பு ரீதியாகவும் தாக்கங்களை ஏற்படுத்துவதாக உள்ளது. இந்தியாவுக்கு மிக அண்டையிலுள்ள மாலைதீவு இது வரையில் இந்தியாவின் அரவணைப்பில்தான் இருந்துவந்தது. ஆபத்து என்றதும் ஓடிப்போய் உதவுவதும் இந்தியாதான். 1988 ஆம் ஆண்டு ப்ளொட் இயக்க உறுப்பினர்கள் கப்பல் ஒன்றில் சென்று மாலைதீவைக் கைப்பற்றியபோது உடனடியாகத் தனது படைகளை அனுப்பி மீட்டது இந்தியாதான். விடயம் இப்படி இருக்க இந்தியாவை, மாலைதீவு ஒரேயடியாகத் தூக்கியெறிந்த விவகாரம் கடும் அரசியல் நெருக்கடியாக உருவெடுத்துள்ளது. மாலைதீவின் முடிவு இருநாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது. இந்த நெருக்கடி ஏற்பட, பின்னால் இருந்து கிள்ளிவிடும் காரி

அதிர்ச்சியைக் கொடுத்தது இலங்கை.

இந்தியாவில் இருந்து இறக்குமதியாகும் மோட்டார் வாகனங்களுக்காக வரியை கடுமையாக அதிகரித்தது இலங்கை அரசாங்கம். கார்கள் மீதான சுங்கவரி 73 சதவீரமும் முச்சக்கர வாகனங்கள் மீதான வரி 45 சதவீதமும் உயர்த்தப்பட்டுள்ளன. வர்த்தகப் பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் மீதான வரியும் பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன. இது இந்தியாவின் மோட்டார் வாகன ஏற்றுமதியாளர்களுக்கு பேரிடியாக அமைந்துள்ளது. காரணம், இந்தியாவின் மோட்டார் வாகன ஏற்றுமதியில் 'கிட்டத்தட்ட 13 சதவீதம் இலங்கைக்கே ஏற்றுமதியாகிறது.

கடந்த ஆண்டில் சுமார் 6 பில்லியன் டொலருக்கு மோட்டார் வாகனங்களை ஏற்றுமதி செய்திருந்தது இந்தியா. இதில் 800 மில்லியன் டொலர் பெறுமதியான வாகனங்கள் இலங்கைக்கே ஏற்றுமதி செய்யப்பட்டன.


இதுபோன்ற சம்பவம் நடந்து விடக்கூடாது என்பதற்காகவே சீனாவின் முதலீடு உதவிகளுக்கு இணையாக இலங்கைக்கு இந்தியா உதவி

ஆதிக்கம் மேலும் அதிகரிப்பதற்கான அறிகுறியாகப் பார்க்கிறது இந்தியா.

சீனா கட்டியுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகச் சுற்றாடலில் வாகன உதிரிப்பாகங்களை ஒன்றிணைக்கும் தொழிற்சாலைகளை அமைக்க இந்தியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு இலங்கை அரசாங்கத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டது. அப்போது சீனாவைத்தவிர வேறு நாடுகள் அதற்கு முன்வரவில்லை. இந்தப் பின்னணியில்தான் இந்தியாவுக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளது இலங்கை.

இலங்கை அரசின் இந்த முடிவு இந்திய அரசை எந்தளவுக்கு இறங்கி வரச் செய்கிறதோ, இல்லையோ பல இந்திய நிறுவனங்களை வழிக்கு கொண்டுவரச் செய்துள்ளது. உடனடியாகவே மாருதி, சுசுகி நிறுவனம் இலங்கையில் வாகன உதிரிப்பாகங்களை ஒருங்கிணைக்கும் தொழிற்சாலையை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது. இதுபோன்ற முடிவை டாட்டா, ரி.வி.எஸ், அசோக்லேலன்ட், பஜாஜ், மகேந்திரா உள்ளிட்ட மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனங்களும் விரைவி





லேயே எடுக்கலாம். அது இலங்கையை ஒரு கைத்தொழில் அபிவிருத்தி நாடாக காண்பிப்பதற்கு அரசாங்கத்துக்கு உதவியாக அமையும். பிராந்திய வல்லரசான இந்தியாவின் முக்கிய நிறுவனங்களை கடந்த வாரம் மிரளவைத்துவிட்டது இலங்கை அரசாங்கம்.

அதேவேளை இதை இந்திய அரசாங்கம் சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. இதனை ஒரு பொருளாதார ரீதியான நடவடிக்கையாக இந்தியா கருதியதாகத் தெரியவில்லை. அதற்கும் அப்பால் சீனாவின் தூண்டுதல் இருந்திருக்கலாம் என்று இந்தியா கருதுவதால்தான் அதுபற்றிய விசாரணை ஒன்றுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஏற்கனவே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இராஜதந்திர ரீதியான ஒரு நெருடல் நிலவிவரும் சூழலில் இந்தியாவின் கருத்துக்களை இலங்கை புறக்கணித்துவரும் நிலையில் இந்திய நலனுக்கு விரோதமான ஒரு நகர்வை வெளிப்படையாக அது மேற்கொண்டுள்ளது.

மிகச் சிறிய அண்டை நாடுகளான மாலைதீவும் இலங்கையும் சீனாவின் நிழலில் இருந்து கொண்டு தன்னைச் சீண்டிப் பார்ப்பதை இந்தியா ஒரு போதும் விரும்பாது. இந்தியாவின் பதில் நகர்வு அல்லது அடுத்த நகர்வு எவ்வாறு அமையப்போகிறது என்பது இப்போது சர்வதேச மட்டத்தில் உன்னிப்பாக அவதானிக்கப்படும் ஒன்றாக மாறியுள்ளது. ஏற்கனவே சீபா உடன்பாட்டை செய்து கொள்வதற்கு இலங்கையை வலியுறுத்தி வரும் இந்தியா, வரும் நாட்கள் அதற்கான அழுத்தங்களை அதிகரிப்பதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

அதற்கு காரணங்களும் உள்ளன.

தெற்காசியாவிலுள்ள மிகவும் சுறுசுறுப்பான விமான நிலையங்களில் ஒன்றான மாலி சர்வதேச விமான நிலையம், இந்திய நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலேயே முற்றிலுமாக இருந்துவந்தது. 2010 இல் தனியார்மயமாக்கப்பட்ட இந்த விமான நிலையத்தின் விமானக் கட்டுப்பாட்டுப்பிரிவு, விமான நிலைய சேவைகள் மற்றும் ஓடுபாதை அபிவிருத்தி என்று எல்லாவற்றிற்குமே ஜி.எம்.ஆர். நிறுவனமே பொறுப்பாக இருந்தது. 500 மில்லியன் டொலரை இந்த நிறுவனம் மாலைதீவு விமானநிலைய உடன்பாட்டில் முதலீடு செய்திருந்தது. முன்னைநாள் அதிபர் நசீட்டின் ஆட்சிக் காலத்தில் செய்துகொள்ளப்பட்ட இந்த விமானநிலைய உடன்பாட்டில் மோசடிகள் இருப்பதாகக்கூறி மாலைதீவு அமைச்சரவையின் ஒப்புதலுடன் புதிய அரசாங்கம் திடீரென்று இரத்துச் செய்தபோது இந்தியாவுக்குக் கடும் அதிர்ச்சி.

யத்தை மேற்கொள்வது சீனாவே என்று பலமாக நம்புகிறது இந்தியா.

அண்மையில் மாலைதீவுடன் நெருக்கமான உறவுகளை பேணத் தொடங்கிய சீனா, அங்கு ஒரு தூதரகத்தை திறந்த போதும், துறைமுகம் ஒன்றை அமைக்கும் பணிகளை முன்னெடுத்த போதும் அதை இந்தியா அவ்வளவாக கணக்கெடுக்கவில்லை. காரணம், மாலி சர்வதேச விமானநிலையம்தான் இந்திய நிறுவனத்தின் கையில் இருக்கிறதே என்ற அசட்டைதான். இப்போது அந்த விமான நிலையத்தில் இருந்து இந்திய நிறுவனம் துரத்தப்பட்டதை இந்தியாவினால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அது தனதும், பிராந்தியத்தினதும் பாதுகாப்புக்கு ஆபத்தாகிவிடுமோ என்று கலங்குகிறது. மாலைதீவை சினந்து கொண்டாலும், இந்தியா கடுப்புடன் பார்ப்பது சீனாவைத்தான். மாலைதீவு அரசுக்கு இந்தத் துணிச்சலைக் கொடுத்தது சீனாதான் என்று இந்தியா வலுவாக நம்புகிறது.

இந்த அதிர்ச்சியில் இருந்து இந்தியா மீள்வதற்கிடையில் அடுத்த

களை வழங்கி வந்தது. இருந்த போதிலும், அண்டைநாடான இலங்கை இப்படியொரு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று இந்தியா எதிர்பார்க்கவேயில்லை. இந்திய வாகனங்களுக்கான வரி உயர்த்தப்பட்டுள்ள அதேவேளை ஜப்பான், சீனா போன்ற நாடுகளின் வாகனங்களுக்கான இறக்குமதி வரிகள் ஏதும் உயர்த்தப்படவில்லை. இதனால், இந்திய நிறுவனங்களின் ஏற்றுமதி முற்றாகவே படுத்துவிடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்தியாவுடன் இலங்கை செய்து கொண்ட சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் வாகனங்கள் சேர்க்கப்படவில்லை. ஆனால், ஜப்பான், சீனா போன்ற நாடுகளுடனான உடன்பாட்டில் வாகனங்கள் சேர்க்கப்பட்டுள்ளதால் அவற்றுக்கு இந்த வரி உயர்வு இல்லை. இந்திய வாகனங்களின் இறக்குமதிக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கையில் இரண்டு, வாகன உதிரிப்பாகங்களை ஒருங்கிணைக்கும் தொழிற்சாலைகளை சீனா நிறுவப்போகிறது. இது சீனாவின்

இன்ஃபோதமிழ்- ஹரிகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கு தமிழ் மற்றும் சிங்கள மாணவர்கள் தெரிவாவதில் வீழ்ச்சி

## கல்வியமைச்சர் பந்துல கவலை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு தமிழ் மற்றும் சிங்கள மாணவர்கள் தெரிவாவதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால் முஸ்லிம் மாணவர்கள் தெரிவாவதில் பாரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலவச கல்விக்கு கோடிக்கணக்கில் நிதி செலவிடப்படுகின்றது. அந்த இலவச கல்வியில் கற்றவர்களுக்கு தொழில் வாய்ப்பு இல்லை. தொழில் வாய்ப்புக்கு ஏற்றவகையில் கற்றவர்களும் நாட்டில் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கல்வியமைச்சு தொடர்பான நாடாளுமன்ற குழுவுக்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட யோசனைகள் கிடைத்தன. அந்த யோசனைகளை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கு போதியளவான வசதி வாய்ப்புக்கள் இன்மையினால் உரிய காலத்திற்குள் அந்த யோசனைகளை வெளியிட முடியாதுள்ளது.

ஆரம்ப பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்துக்கொள்ளல், இடைவிலகல், எழுத்தறிவு ஆகியவற்றில் பிரச்சினைகள் இல்லை. சார்க்வலய நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர்மட்டத்திலும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு அண்மையிலும் நாம் நிற்கின்றோம்.

ஆங்கில பட்டதாரி ஆசிரியர்களுக்கான வேலைவாய்ப்புக்கள் 800 இருக்கின்றன. எனினும் நாட்டில் 202 ஆங்கில பட்டதாரி ஆசிரியர்களே இருக்கின்றனர்.

நாட்டில் 336 பிரதேச செயலகங்கள் இருக்கின்றன. அதில் 72 பிரதேச செயலகங்களில் விஞ்ஞான பாடசாலைகள் ஒன்று கூட இல்லை.

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் சகலருக்கும் சமவுரிமை வழங்கும் வகையிலேயே ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த 2009 ஆம் ஆண்டை பொறுத்த வரையில் பல்கலைக்கழகங்களுக்கு தமிழ் மற்றும் சிங்கள மாணவர்கள் தெரிவாவதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால் முஸ்லிம் மாணவர்கள் தெரிவாவதில் பாரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அந்த ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்களில் சிங்கள மாணவர்களில் 0.9 வீதமும் தமிழ் மாணவர்களில் 0.2 வீதமும் வீழ்ச்சி ஏற்பட்டது. எனினும் முஸ்லிம் மாணவர்கள் தெரிவாவது அந்த ஆண்டில் மட்டும் 10.8 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

ஒரே பாடசாலையில் 20 வருடங்களுக்கு மேலாக கற்பிக்கும் ஆசிரியர்கள் 3 ஆயிரத்து 100 பேரும் 10 வருடங்களுக்கு மேலாக கற்பிக்கும் ஆசிரியர்கள் 9 ஆயிரத்து 300 பேரும் இருக்கின்றனர். அவர்களுக்கு எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு நிச்சயமாக இடமாற்றம் வழங்கப்படும் என்றார். (அ-2)

# துப்பாக்கி சத்தம் கேட்டவுடன் ஏன் அறிவிக்கவில்லை?

## விஜயதாஸவை பொலிஸார் கேட்டனர்

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவின் நடவடிக்கைகள் குறித்து பொலிஸார் கேள்வி எழுப்பியுள்ளனர். துப்பாக்கிசூட்டு சம்பவம் தொடர்பிலான தகவல்களை உரிய முறையில் வழங்கத் தவறியுள்ளதாக பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்ற உடனேயே பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அல்லது 119 அவசர பொலிஸ் அழைப்பு சேவைக்கு ஏன் அறிவிக்கவில்லை என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். துப்பாக்கிச்சூட்டு சத்தம் கேட்ட உடனேயே அறிவித்திருந்தால் சந்தேக நபர்களை கைது செய்திருக்க முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் இரண்டு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. (அ-2)

# 106 மில்லியன் அமெ.டொலரில் இலங்கையில் மின் உற்பத்தி

## தொடங்குகிறது ஈரான்

அணு விடயத்தில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சீற்றத்திற்கு ஆளாகியுள்ள ஈரான் இலங்கையில் மின் உற்பத்தி திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளது.

106 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் செயற்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ் இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் குடும்பங்களுக்கு மின் விநியோகிக்கப்படவுள்ளது.

ஈரானின் SUNIR என்ற நிறுவனத்துடன் 2009 ஆம் ஆண்டு அப்போதைய இலங்கை மின்துறை பிரதி அமைச்சர் சாகல ரத்நாயக்க RE8 என்ற பெயரில் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டார்.

குறித்த ஒப்பந்தத்தின் கீழ் ஈரான் நிறுவனம் மின் உற்பத்தி திட்டத்தில் ஈடுபடவுள்ளது. இதற்கான காப்புறுதியை ஈரான் ஏற்றுமதி நிறுவனம் ஒன்று வழங்குகிறது.

ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யக்கூடாதென இலங்கை உள்ளிட்ட பல நாடுகளுக்கு ஐக்கிய அமெரிக்கா தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தமிழ்மொழியை முதன்மைப்படுத்தி மீளவும் அமைகிறது பெயர்ப்பலகை

## சர்ச்சையை அடுத்து

(சிவநகர்)

பூநகரி புதிய தபாலகத்திற்கான பெயர்ப்பலகை மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டுள்ள போதும் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாது சிங்கள மொழியை முதன்மைப்படுத்தி எழுதியமையால் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து மீளவும் தமிழ்மொழியை முதன்மைப்படுத்தி எழுதுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் கட்டப்பட்டு இன்று திங்கட்கிழமை திறக்கப்பட இருந்த பூநகரி தபாலகத்திற்கான பெயர்ப்பலகை மும் மொழிகளிலும் எழுதப்பட்டுள்ள போதிலும் சிங்கள மொழியை முதன்மைப்படுத்தி எழுதியதாலேயே இப்பிரச்சினை எழுந்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு வேலைத் திட்டமாக இருந்தாலும் சிங்கள பிரதேசங்களுக்கு சிங்கள மொழியை முதன்மைப் படுத்தியும் தமிழ் பிரதேசங்களுக்கு தமிழ் மொழியை முதன்மைப்படுத்தியுமே பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட வேண்டுமென பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திட்டப்பணிப்பாளர் முன்மொழிந்துள்ளார்.

இருப்பினும் தமிழ் பிரதேசத்தில் சிங்கள மொழியை முதன்மைப்படுத்தியமையினாலேயே இச்சர்ச்சை எழுந்துள்ளது.

சில திணைக்களங்கள் ஊடாகவே இப் பிரச்சினை எழுகின்றது. எனவே தமிழ் திணைக்கள அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து தமிழ்மொழியை முன்நிறுத்த ஆவண செய்யவேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)

# புதுவருடத்தை முன்னிட்டு கடைகள் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் சகல வர்த்தக நிலையங்களும் எதிர்வரும் நத்தார் புதுவருடப் பிறப்பு தினங்களை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரையான சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் திறந்து வியாபாரம் நடைபெறுமென யாழ்ப்பாணம் வணிகர்கழக செயலாளர் இ.ஜனக்குமார் அறிவித்துள்ளார்.

அத்துடன்விடுமுறைதினங்களில்வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டுமெனவும் யாழ்.வர்த்தகர்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ந-9)

## பேருந்து உரிமையாளர்களிடம்

# மும்மொழி கொள்கையை கடைப்பிடிக்க கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் மும்மொழிக் கொள்கையை அமுல்படுத்தாத பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய மொழிகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மும்மொழிக் கொள்கையை அமுல்படுத்தாத பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராக இவ்வாண்டு இறுதிக்குள் சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பேருந்துகளில் மூன்று மொழிகளிலும் பெயர்ப்பலகை குறிப்பிடப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த உத்தரவினை ஏற்றுக்கொள்ளத் தவறும் பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்துடன் பஸ்களில் மும்மொழிக் கொள்கை அமுல்படுத்தப்படுகின்றதா என்பது பற்றி ஆராயப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)




தியத்தலாவ இராணுவ பயிற்சி கல்லூரியில் பயிற்சிகளை முடித்துக் கொண்ட ஒரு தொகை படையினர் வெளியேறும் நிகழ்வு நேற்றையதினம் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்திய இராணுவ அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் பிக்ரம் சிங் மற்றும் படை உயரதிகாரிகள் ஆகியோரை படத்தில் காணலாம்.

# திரைக்கலைஞர் சங்கம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் திரைப்படக் கலையில் ஈடுபடுவோரின் நலன்கருதி அமைக்கப்பட்ட வடமாகாண திரைக்கலைஞர் சங்கத்தின் நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் AAA Movies International மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக ந.கேசவராஜன், செயலாளராக துளிர்கள் நிறுவனத் தலைவரும் திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் நடிகருமான கே.எஸ். ரகுநாதன், பொருளாளராக அந்தோனிப்பிள்ளை ஜசிதரன், உபதலைவராக சிறிபுஸ்பநாதன் துசிகரன், உப செயலாளராக செல்வி சாளினி சாள்ஸ், பத்திராதிபராக தில்லை நடராஜா மயூரகன், காப்பாளராக க.செவ்வேள், ரில்கோ நிறுவன முதல்வர் திலகராஜா ஆகியோரும் 5 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டில் வெளியிட 10 இலட்சம் ஆவணங்கள் தயார்

## விக்கிலீக்ஸ் நிறுவுநர் எச்சரிக்கை

(லண்டன்)

விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் அடுத்த ஆண்டில் வெளியிட 10 இலட்சம் ஆவணங்கள் தயாராகவுள்ளன. இவற்றை வெளியிட்டால் பல நாடுகளின் இரகசியங்கள் வெளிவரும் என்று ஜூலியன் அசாஞ்சே மிரட்டல் விடுத்துள்ளார்.

பிரபல விக்கிலீக்ஸ் இணையத்தளத்தை நடத்தி வரும் ஜூலியன் அசாஞ்சே அதில் அமெரிக்காவின் பல்வேறு இரகசியங்களை வெளியிட்டார். இதனால் அவர் மீது அமெரிக்கா கடும் கோபத்தில் உள்ளது.

இந்நிலையில் இவர் மீது சுவீடன் நாட்டில் பாலியல் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்குக்காக லண்டனில் தங்கியிருந்த அவர் 2010 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். பின் பிணையில் வெளிவந்த அவர் அங்குள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் தஞ்சம் அடைந்தார். பிரிட்டன் அரசு தன்னை சுவீடனிடம் ஒப்படைத்தால் அவர்கள் அமெரிக்காவுக்கு நாடு கடத்தி விடுவார்கள் என்றும் அங்கு தனக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என்றும் அவர் கூறினார்.

தூதரகத்தில் இருந்து வெளியேறினால் லண்டன் பொலிஸார் கைது செய்வார்கள் என்ற அச்சத்தில் அங்கேயே அவர் முடங்கியுள்ளார். இந்நிலையில் அசாஞ்சே நேற்று முன்தினம் இரவு தூதரகத்தில் இருந்தபடியே தனது ஆதரவாளர்களை சந்தித்தார்.

அவர்களிடம் அசாஞ்சே பேசுகையில், கடந்த 6 மாதமாக இங்கேயே அடைபட்டுள்ளேன். ஆனாலும் எனது பணிகளை செய்து வருகிறேன். பாதுகாப்பாகவே இருக்கிறேன். விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் வெளியிட 10 இலட்சம் ஆவணங்கள் தயாராக உள்ளன. அவற்றை வெளியிட்டால் பல நாடுகளின் இரகசியங்கள் வெளியே வந்து பாதிப்பை ஏற்படுத்தும். இங்கிருந்து நான் பாதுகாப்பாக வெளியேற யாராவது பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தால் வரவேற்கிறேன். இவ்வாறு அசாஞ்சே கூறினார். (அ-2)

# அமெரிக்க வாழ் இந்தியருக்கு கண்டுபிடிப்புக்கான விருது

## ஒபாமா அறிவிப்பு

(வோஷிங்டன்)

தொழில்நுட்பம் மற்றும் நவீன கண்டுபிடிப்புக்காக தேசிய அளவிலான விருதுகளை கடந்த 1959 ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா வழங்கி வருகின்றது. இந்த ஆண்டு இவ்விருதினை பெறுபவர்கள் பட்டியலில் அமெரிக்காவில் வாழும் இந்தியரான ரங்கசுவாமி சீனிவாசனின் பெயரை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிவித்துள்ளார்.

ஐ.பி.எம். நிறுவனத்தின் கீழ் இயங்கும் டி.ஜே. வாட்சன் ஆராய்ச்சி மையத்தில் தற்போது பணியாற்றி வரும் இவர் 1949 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழகத்தில் அறிவியல், இளங்கலை, முதுகலை பட்டங்களை பெற்றவர்.

மருத்துவ துறையில் பயன்படுத்தப்படும் லேசர் சிகிச்சைகள் குறித்து இவர் நடத்திய ஆராய்ச்சியின் பலனாக கண் சத்திரசிகிச்சையில் நவீன முறையான லேசிக் சிகிச்சை முறை 1983 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பல இலட்சம் மக்கள் பார்வை குறைபாட்டில் இருந்து நிவாரணம் பெற முடிந்தது.

ஆராய்ச்சியாளர்களுக்கு இந்த விருதுகளை வழங்க ஒபாமா பரிந்துரைத்தார்.

அமெரிக்க கண்டுபிடிப்பாளர்களான இவர்களை கௌரவிப்பதில் நான் பெருமைப்படுகின்றேன். இந்த நாட்டிற்கு இவர்கள் தங்களின் கண்டுபிடிப்பின் மூலம் பெருமை தேடித் தந்துள்ளார் என்று ஒபாமா கூறியுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் வெள்ளை மாளிகையில் நடைபெறவுள்ள விருது வழங்கும் விழாவில் ரங்கசுவாமி சீனிவாசனுக்கு இவ்விருதினை ஒபாமா வழங்குகின்றார். (அ-2)

## உலக தரிசனம்

# குர்ஆனை எரித்ததாக கருதி சந்தேக நபர் எரிக்கப்பட்டார்

பாகிஸ்தானில் முஸ்லிம்களின் புனித நூலான குர்ஆனை இழிவுபடுத்திய நபர் ஒருவர் எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின் தெற்கு பகுதியில் உள்ள கிராமத்து பள்ளிவாசலொன்றில் நபர் ஒருவர் தங்கியிருந்தார்.

மறுநாள் காலையில் அந்த பள்ளிவாசலுக்கு அருகே குர்ஆன் பிரதி ஒன்று கருகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டது. தங்கியிருந்த நபர் தான் குர்ஆனை எரித்தார் என கருதிய கிராம மக்கள் பொலிஸாரிடம் பிடித்து கொடுத்தனர்.

ஆனால் ஒருமணிநேரமே ஆன நிலையில் 200 பேர் அடங்கிய பெரிய கும்பலொன்று பொலிஸ் நிலையத்திற்குள் புகுந்து தடலடியாக அந்நபரை வெளியில் இழுத்து வந்து தீ வைத்து கொளுத்தினர்.

இத்தாக்குதல் தொடர்பில் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் கவனக்குறைவாக இருந்த காரணத்தினால் பொலிஸ் அதிகாரிகள் ஏழு பேர் பதவி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

# திருடனை மன்னித்து விடுவித்தார் போப்

தன்னுடைய இரகசிய ஆவணங்களை திருடி பத்திரிகைகளில் வெளியிட்ட சமையல்காரரை போப் ஆண்டவர் மன்னித்துள்ளார். வத்திக்கான் நகரத்தில் போப் ஆண்டவர் 16 ஆம் பெனடிக்ற் இன் தலைமை சமையல்காரராக பணிபுரிந்தவர் பாலோ கபிரியேல். இவர் போப் ஆண்டவரின் தனிப்பட்ட ஆவணங்களை திருடி பத்திரிகைகளில் வெளியிட்டார்.

இது தொடர்பான வழக்கில் கபிரியேலுக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ள கரிபியேலுக்கு பொது மன்னிப்பு வழங்க போப் ஆண்டவர் முடிவு செய்தார்.

இதற்காக சிறைக்கு சென்று கரிபியேலை சந்தித்து பேசி அவருக்கு மன்னிப்பு வழங்கினார். இதனையடுத்து உடனடியாக சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

வத்திக்கான் நகரத்துக்கு வந்த கரிபியேல் தன் மனைவி மற்றும் குழந்தைகளுடன் கிறிஸ்துமஸ் கொண்டாட உள்ளார். ஆனால் அவர் தொடர்ந்து வத்திக்கானில் தங்கியிருக்கவோ பணிபுரியவோ முடியாது. (அ-2)

## ஆஸி. தீவுகளில் நிலநடுக்கம்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் வனாது தீவுகளில் நேற்று முன்தினம் அதிகாலை திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து வீடுகள் குலுங்கின.

அப்போது வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்த மக்கள் அதிர்ச்சியுடன் எழுந்தனர். நில நடுக்கம் ஏற்பட்டதை அறிந்த மக்கள் வீடுகளை விட்டு அலறியடித்தபடி வெளியேறி வீடுகளில் தங்கியிருந்தனர்.

அங்கு நிலநடுக்கம் 6.6 ரிக்டர் அளவில் பதிவானதாக அவுஸ்திரேலியா வானிலை மையம் அறிவித்துள்ளது. பூமிக்கு அடியில் 200 [illegible] இது உருவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தலிபான்களின் தாக்குதலில் அமைச்சர் உட்பட 9 பேர் பலி



பாகிஸ்தானில் தலிபான்கள் நடத்திய தாக்குதலில் அமைச்சர் உட்பட 9 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். பாகிஸ்தானில் பெஷாவர் மாகாணத்தின் கிஸ்ஸா குவானி பஜார் பகுதியில் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் பெஷாவர் மாகாண அமைச்சரும் அவாமி தேசியகட்சியின் முன்னணி தலைவருமான பஷீர் பிலவர் கலந்து கொண்டார்.

அப்போது பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்து சிதறியதில் அமைச்சர் உட்பட 9 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். 18 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 3 முறை பஷீர் பிலவருக்கு தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் இயக்கம் கொலை மிரட்டல் விடுத்திருந்ததாகவும் இந்த தாக்குதலுக்கு அந்த இயக்கம் தான் காரணமாக இருக்க வேண்டும் என்றும் தகவல் துறை அமைச்சர் இப்திகார் ஹூசைன் கூறியுள்ளார். (அ-2)

# மகாராணியின் பெயர் சூட்டியமைக்கு ஆர்ஜென்டீனா கடும் எதிர்ப்பு

அந்தாட்டிக்காவின் ஒரு பகுதிக்கு மகாராணியின் பெயர் சூட்டப்பட்டமைக்கு ஆர்ஜென்டீனா எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஆர்ஜென்டீனாவிற்கான பிரித்தானிய தூதுவரை அழைத்து கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மகாராணியை கௌரவிக்கும் வகையில் ஏன் அந்தாட்டிக்காவின் பகுதிக்கு அவரது பெயர் சூட்டப்பட்டது என அரசாங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

பிரிட்டிஷ் அந்தாட்டிக் வலயம் என அழைக்கப்பட்ட பகுதியின் ஒ[illegible] பிரதேசத்திற்கு மகாராணியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அந்தாட்டிக் தென்பகுதி வலயத்திற்கு மகாராணி எலிசபெத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் வில்லியம் ஹேக்கினால் இந்தப் பெயர் சூட்டப்பட்டது.

அப்பகுதிக்கு பெயர் சூட்டும் அதிகாரமோ உரிமையோ பிரித்தானியாவிற்கு கிடையாது என ஆர்ஜென்டீனா தெரிவித்துள்ளது. (அ-2)

# ஈரானுக்குள் நுழைய முயன்ற 11 பேர் சுட்டுப்படுகொலை

ஈரான் நாட்டு எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற 11 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் பலுசியஸ் பகுதியிலிருந்து வந்த 11 பேரே ஈரான் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற போது அப்பகுதியில் மறைந்திருந்த மர்ம கும்பலொன்று அப் 11 பேரையும் சுட்டுக்கொன்றுள்ளது.

இந்த சம்பவத்துக்கு இதுவரையிலும் எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. சம்பவம் நடைபெற்ற பகுதியிலிருந்து ஈரான், துருக்கி வழியாக ஐரோப்பாவுக்கள் சட்டவிரோதமாக பலரும் நுழைகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்தின் ஆடம்பரத்தை தடுக்க சீன அரசு நடவடிக்கை

(பீஜிங்)

சீன இராணுவத்தின் செலவு மற்றும் ஆடம்பரத்தை தடுக்க அரசு பல்வேறு அதிரடி கட்டுப்பாடுகளை கொண்டு வந்துள்ளது.

சீனாவில் கம்யூனிஸ்ட் தலைவராக சமீபத்தில் ஜி ஜின்பிங் நியமிக்கப்பட்டார்.

சீன இராணுவத்தில் தலைவர் பொறுப்பு வகிக்கும் ஜி ஜின்பிங் பல அதிரடி கட்டுப்பாடுகளை கொண்டு வந்துள்ளார். இராணுவத்தில் ஆடம்பரம் இல்லாமல் எளிமையை கொண்டு வரவும் செலவுகளை குறைக்கவும் பல விதிமுறைகளை கொண்டு வந்துள்ளார்.

இராணுவத்தில் என்னென்ன செய்யலாம். என்னென்ன செய்யக்கூடாது என்ற 10 விதிமுறைகள் அடங்கிய பட்டியலை வெளியிட்டுள்ளனர்.

அதில் உயரதிகாரிகளுக்கு நட்சத்திர விடுதிகளில் ஆடம்பர வரவேற்பு அளிக்கக்கூடாது. விருந்தின் போது உயர்ரக மது வகைகள் வழங்க கூடாது. அதிகாரிகளை வரவேற்க பனர்கள் வைக்கக்கூடாது.

சிவப்பு கம்பள வரவேற்புக்கு செலவிடக்கூடாது. அலங்காரம், நூற்றுக்கணக்கான வீரர்கள் அணிவகுப்பு, நினைவு பரிசு போன்றவற்றுக்கு பணம் செலவிடக்கூடாது என்ற கூறப்பட்டுள்ளது.

இராணுவ அதிகாரிகள் ஆய்வுப் பணிக்காக வெளியூர் செல்லும் போது ஆடம்பர வசதிகள் கொண்ட தனியார் விடுதிகளிலோ இராணுவ விடுதிகளிலோ தங்கக்கூடாது. வெளிநாட்டு பயணங்களை குறைத்து கொள்ள வேண்டும். அடிக்கல் நாட்டுவிழா, ரிப்பன் வெட்டி கடை திறப்பது போன்ற நிகழ்ச்சிகளில் அதிகாரிகள் பங்கேற்கக்கூடாது. ஏதாவது நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டுமானால் இராணுவ தலைமையிடத்தில் முன் அனுமதி பெற வேண்டும். மனைவி, குழந்தைகள் உடன் வேலை செய்பவர்கள் ஒழுக்கமாக இருப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும். அவர்கள் ஊழல் செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதுபோன்ற அதிரடி உத்தரவுகளால் சீன அதிகாரிகள் பலர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் வைகுண்ட ஏகாதசி

ஏகாதசி விரதமானது எல்லா விரதங்களுள் மிகவும் சக்தி வாய்ந்தது. ஒன்றையும் உண்ணாமல் இருப்பதே உபவாசம். அன்னம் பால் தீர்த்தம் இவற்றில் ஒன்றையாவது உட்கொண்டால் அது விரதமாகாது.

புராண காலத்தில் மாபெரும் மன்னனான ருக்கு மாங்கதன் அனைவரும் ஏகாதசி விரதம் அனுஷ்டிக்க வேண்டுமென ஆணையிட்டான்.விரதம் அனுஷ்டித்த அனைவரும் பூரண ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் வாழ்ந்தனர்.இதனால் யமனுக்கு வேலை குறைந்து விட்டது.இதனால் தேவர்கள் மோகினியை அனுப்பினார்கள். காட்டுக்கு வேட்டைக்கு சென்ற ருக்குமாங்கதன் அவள் மீது மோகங் கொண்டு அவளைத் திருமணம் செய்து கொண்டான்.


ஏகாதசி தினத்தில் அதிகாலை எழுந்த மன்னன் மோகினியை ஸ்நானம் செய்து பூஜை அறைக்கு வருமாறு உபவாசமிருந்து பகவத் கதா சிவரணம் கேட்கலாம் என கூறினான். இவையெல்லாம் தேவையில்லாத தொன்று என மோகினி கூறினாள். அப்பொழுது மன்னனுக்கு தான் செய்த தவறு தெரிந்தது. தன் சொல்லை மீறினால் அருமை மைந்தன் தர்மாங்கதன் உயிருக்கு ஆபத்து ஏற்பட வேண்டியிருக்கும் என்றாள் மோகினி. அவளது வார்த்தையால் சினமுற்ற மன்னன் தன் மைந்தனை வெட்டி உனக்கு பலியாக்கி விட்டு ஏகாதசி விரத பங்கு இல்லாமல் செய்கிறேன் என்று கூறி மன்னன் வாளை வீசவே அது தர்மாங்கதன் கழுத்தில் பூமாலையாக வீழ்ந்தது.இந்தத் தருணத்தில் மன்னனாதிய தங்களது மன உறுதியை பரீட்சிக்கவே தான் மோகினி வடிவாக வந்தாதாகவும் கூறி தர்ம தேவதை மறைந்தார்.

ஏகாதசியில் உபவாசமிருக்காதவர்களுக்கு பாறணை பலன் தராது. துவாதசி எத்தனை நாள் இருக்கிறீர்களோ அதில் எட்டில் ஒரு பாகத்திற்கு ஹரிவாஜம் என்று பெயர். அந்தச் சமயம்பூஜை முடிந்து உண்பது பகவானுக்கு அன்னமிடுவதாகும்.

பகல் தூக்கம் ,எண்யெண் ஸ்நானம் ஸ்திரி போகம் ஏகாதசி விராத்தின் புனித தன்மையை அகற்றிவிடும்.

மஹா விஷ்ணுவுக்குரிய பிரியமான ஏகாதசி நோன்பை இந்துக்கள் முக்கிய நோன்பாக அனுஷ்டிப்பது வழமை. வளர்பிறையில் ஒன்றும் தேய்பிறையில் ஒன்றும் மாதம் இரு முறை உபவாசமிருப்பது உடல் நலத்திற்கு நன்மை பயப்பதாக அமையும். மார்கழி மாதங்களில் சிறந்த மார்கழி திங்களில் வரும் வளர்பிறை ஏகாதசி இறையன்பிற்கு முக்கியமானதாக அமையும்.

விஷ்ணு ஆலயங்களில் வைகுண்ட ஏகாதசி திறக்கப்படும். வைகுண்ட வாசல் வழியாகச் சென்று திருமாலைத் தரிசனம் செய்தால் பிறப்பு இறப்புகளிலிருந்து விடுபட்டு வீடுபேற்றை எய்த முடியும் என்பது நம்பிக்கை.ஈழத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயங்களான பொன்னாலை



ஸ்ரீ வரதராஜப் பெருமான் ,வல்லிபுரம் ஸ்ரீ ஆழ்வார் , யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் ஆலயம் ஆகிய வற்றில் வைகுண்ட ஏகாதசி சுவர்க்க வாசல் திறப்பு என்பன நடைபெறு வருகின்றன.

**தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்**

***

உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல காத்தற்கடவுளான மகா விஷ்ணுவைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் விரதம் வைகுண்ட ஏகாதசி.இன்று நிகழும் இந்த விரதமானது வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் ஒரு புனிதம் நிறைந்த புண்ணிய விரதமாகும்.

இந்த வைகுண்ட ஏகாதசி விரதத்தை சுவர்க்க வாயில் ஏகாதசி எனவும் அழைப்பர். இன்றைய இந்த மகிமைமிக்க நல்ல விரதத்தை முறைப்படி அனுட்டிப்பவர்களுக்கு சுவர்க்க வாசல் திறந்தே இருக்கும்.

உலகின் கண்ணேயுள்ள அனைத்து ஜீவராசிகளையும் தம்முடைய திருவருட் சக்தியினால் காத்தருள்பவர் விஸ்ணு மூர்த்தியே. இவரை முற்றுமுழுதாக இன்று நம்பி வழிபட்டால் உலகில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று சுகமே வாழலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்த வைகுண்ட ஏகாதசி விரதம் ஸ்ரீ கிருஸ்ணர் அதாவது பெருமாள் கோயில்களில் வெகு சிற ப்பாக கொண்டாடப்படுகிறது. எதுவும் உண்ணாது ஸ்ரீ கிரு ஸ்ண பரமாத்மாவின் தோத்திரங்களைப் பாராயணஞ் செய்து இரவு நித்திரை செய்யாது கண்விழித்துபகவானின் நினைவாகவே இருந்து பொழுதை கழிக்கவேண்டும்.

நாளைய தினம் காலை குத்து விளக்கேற்றி சாம்பிராணி துாபமிட்டு கற்பூர ஆராத்தி காட்டி வழிபாடு செய்து பாறணை பண்ணலாம்.ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அருள் பெறஉதவுகின்றஇவ்விரதம்பற்றிஒருபத்ம புராண வரலாற்றுக் கதையும் வழக்கிலிருக்கின்றது.

கிருத யுகத்தில் முரண் என்ற ஓர் இரகசுமற்ற அரக்கன் இருந்தான். அவன் தனக்கு இறப்பே வரக்கூடாது என்று வரம் பெற்றிருந்தான். அதனால் எல்லோருக்கும் கூசாமல் தீங்கிழைத்தான்..அவனது கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் தம்மைக் காத்தருளுமாறு தேவேந்திரனிடம் முறையிட்டான். அவனோ தன் நிலையை விஷ்ணுவிடம் எடுத்துரைத்தான். உடனே மகாவிஷ்ணு முரணோடு போர் செய்தார். அவன் அசையவில்லை.

அவனுடன் யுத்தம் புரிந்து அவனைக் கொல்லமுடியாது என்று உணர்ந்த மகா விஷ்ணு வானவர் தாம் களைப்புற்றவர் போலப் பாசாங்கு செய்து பத்ரிகாசிரமம் என்னும் இடத்துக்குப் போய் ஒரு குகையின் நடுவே யோக நிஷ்டையில் ஆழ்ந்தார். முரண்விடாது போர் தொடுத்தான். அப்போது மகாவிஷ்ணு தன்னுடைய உடலிலிருந்து ஓர் ஆபூர்வ சக்தி வாய்ந்த பெண்ணொருத்தியைத் தோற்றுவித்தார்.

அந்த மகா சக்தி வாய்ந்த பெண் முரனுடன் சண்டையிட்டு அவனை அழித்தொழித்தது என்றும் அந்தப் பெண்ணுக்கு ஏகாதசி என்று பெயரிட்டு இத்தினத்திலே உபவாசமிருந்து தம்மை வழிபாடு செய்பவர்களுக்கு வைகுண்டப் பதவி கிடைக்கட்டும் என்று மகாவிஷ்ணு திருவருள் புரிந்ததாகவும் கூறப்படுகிறது.

மார்கழியில் வரும் தேய்பிறை ஏகாதசி தான் முதலில் வந்தது. இதனை உற்பத்தி ஏகாதசி என்பர். என்றாலும் வளர்பிறையில் வரும் ஏகாதசியே வைகுண்ட ஏகாதசி எனவும் சுவர்க்கவாயில் ஏகாதசி எனவும் கூறப்படு கிறது.

பக்தருக்கு இரங்கும் பரம கருணாநிதியாகிய ஸ்ரீ பரந்தாமனின் பேரருட் கருணையைப் பெற்றிட இன்றைய வைகுண்ட ஏகாதசியே சிறந்த உகந்த நாளாகும். மகா பாரதத்தில் பாண்டவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களையெல்லாம் நீக்கியது போல சுவர்க்கவாயில் ஏகாதசியில் விரதமிருந்து வழிபட்ட அடியார்களின் அல்லல் போக்கிடும் ஆண்டவனாகத் திகழும் ஆபத்பாந்தவனும் அநாதரட்சகனுமாகிய ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியை வழிபட்டு இப்பூவுலகில் நல்ல கீர்த்தியுடன் வாழ்வோமாக.

**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**

***

# வெள்ளத்தால் பாதிப்படைந்த பலருக்கு குளிர் காய்ச்சல் பாதிப்பு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோரில் பலர் குளிர்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக கிண்ணியா தள வைத்தியசாலை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

கிண்ணியா பிரதேசத்தில் பூவரசுந்தீவு, சமாவச்ச தீவு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடமாடும் மருத்துவ சிகிச்சை முகாமுக்கு சிகிச்சை பெறுவதற்கு வந்தவர்களிலேயே பலர் குளிர்க்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நடமாடும் மருத்துவ சிகிச்சை முகாமில் கிண்ணியா மாவட்ட வைத்திய அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.அந்த முகாமில் சிகிச்சை பெறுவதற்காக வந்தவர்களில் சுமார் 150 பேர் குளிர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள் ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை மழை வெள்ளம், காட்டு வெள்ளம் பெருக்கெடுத்துள்ளதால் பூவரசந்தீவு மற்றும் சமாவச்சத்தீஆகிய பிரதேசங்கள் நேற்று முன்தினம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டன.கிண்ணியாவில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு கிழக்கு முதலமைச்சர் நஜிப்-ஏ-மஜீத் கிண்ணியா பிரதேச செயலாளர் ஆகியோர் நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிண்ணியா பிரதேச செயலகத்தினால் சமைத்த உணவுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (அ-2)

# மரண தண்டனை இரத்தை 111 நாடுகள் ஆதரித்தன

## இலங்கை பங்கேற்றவில்லை

மரண தண்டனையை இரத்து செய்யும் வாக்கெடுப்பில் இலங்கை பங்கேற்றவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் மரண தண்டனையை இரத்து செய்வது தொடர்பிலான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பின் போது மரண தண்டனை இரத்து செய்யப்படுவதனை ஆதரித்து 111 நாடுகளும் எதிராக 41 நாடுகளும் வாக்களித்ததுடன் 34 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்றவில்லை.

சட்டவிரோத படுகொலைகள், நீதிக்குப் புறம்பான தண்டனைகள் தொடர்பான வரைவுத்திட்ட யோசனை வாக்கெடுப்பிலும் இலங்கை பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மரண தண்டனை இரத்து தொடர்பிலான ஆதரவு வரவேற்கப்பட வேண்டியது என சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது. (அ-2)

# ஒப்பந்தகாரரின் கவனயீனத்தால் புனரமைப்பு வேலைகள் தாமதம்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

வடமாகாணத்தில் வீதிகள், கட்டடங்கள், குளங்கள் ஆகியவற்றின்புனரமைப்பு வேலைகள் என்பனவற்றை செய்வதற்காக ஒப்பந்தம் செய்து கொண்ட பெரும்பாலான ஒப்பந்தகாரர்கள் உரிய காலத்தில் அந்த வேலைகளை செய்யாமையால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனால் ஊழல்களும் வீண் விரயங்களும்நடைபெறுவதுடன் உரிய காலத்தில் வேலைகளும் முடிவுறுத்தப்படுவதில்லை.

இந்த ஒப்பந்தகாரர்களுக்கு ஒப்பந்தங்களை வழங்கும் திணைக்கள தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் இவற்றில் கூடிய கவனம் எடுப்பதாக தெரியவில்லை. ஒரு ஒப்பந்தகாரர் பல வேலைத்திட்டங்களை ஒரே நேரத்தில் எடுத்து விட்டு அரைவாசி செய்த நிலையிலும் இன்னொரு வேலையை அரை குறையாகவும் செய்து வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

எனவேஇந்தவிடயத்தில் மாவட்டத்திற்கு பொறுப்பானஅரசாங்க அதிபர்கள் திணைக்கள தலைவர்களுடன் இது சம்பந்தமாக ஆலோசனை செய்து ஒழுங்கான முறையில் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு அவை செய்யப்படவேண்டுமென பலராலும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (அ-3-254)

# கமக்கார அமைப்பு தெரிவு புதிதாக இடம்பெற வேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் நலன்கருதி கமக்கார அமைப்புக்கள் புதிதாக தெரிவு செய்யப்பட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்வரும் சிறுபோக காலத்திற்கு முன்பதாக எதிர்வரும் ஆண்டு தொடக்கத்திலேயே இத் தெரிவுகளை செய்வது நலம் எனவும் கடந்த காலத்தில் நடைபெற்ற நடைமுறைகளை. அதனால் ஏற்பட்ட குறை நிறைகளை நிவர்த்தி செய்வதற்கும் பெரும் உதவியாக அமையும் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலத்தில் ஒரு சில கமக்கார அமைப்புகளின் தவறான நடவடிக்கைகளினால் மானியத்திற்கு வழங்கப்பட்ட உர வகைகள் சிறிய விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கிடைக்க பெறாமையினால் பெரிய விவசாயிகள் கைக்கு விரைவில் அவை சென்று ஆயிரம் ரூபா வரையில் வெளியிடத்தில் விற்பனை செய்யப்பட்டமையையும் அவதானிக்க கூடியதாக இருந்ததாகவும் சிறிய விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே இத்தகைய நடவடிக்கைகளை சீர் செய்வதற்கு ஏற்றவாறு கமக்கார அமைப்பினர் புதிய நிர்வாக தெரிவுகள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-3-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஜெ'க்கு எதிராக சாட்சி சொல்ல வற்புறுத்தினார் கருணாநிதி

## சசிகலா வாக்குமூலம்

ஜெயலலிதாவுக்கு எதிராக சாட்சி சொல்ல கருணாநிதி என்னை வற்புறுத்தினார் என்று பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் சசிகலா கூறியுள்ளார்.

ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கை நீதிபதி பாலகிருஷ்ணா விசாரித்து வருகிறார். குற்றவியல் நடைமுறைச் சட்டம் 313இன்படி தற்போது சசிகலாவிடம் கேள்விகள் கேட்கப்பட்டு பதில்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த மே மாதம் 2ஆம் திகதி வரை 632 கேள்விகள் கேட்கப்பட்டன. சசிகலாவிடம் கேள்விகள் கேட்டு பதில்களைப் பதிவு செய்வது சனிக்கிழமை நிறைவடைந்தது. இதுவரை சசிகலாவிடம் ஆயிரத்து 32 கேள்விகள் கேட்கப்பட்டு பதில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சனிக்கிழமை நடைபெற்ற விசாரணையின்போது சசிகலா ஆஜராகி நீதிபதியின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அவர் தமிழகத்தில் தலை தூக்கிவிடக் கூடாது என்ற நோக்கத்தில் அவருக்கு எதிராக சாட்சி கூறுமாறு முன்னாள் முதல்வர் கருணாநிதி என்னை வற்புறுத்தினார். இதற்கு நான் சம்மதிக்கவில்லை.

இதையடுத்து கருணாநிதியின் தூண்டுதலின்பேரில் அரசியல் உள்நோக்கத்துக்காக சொத்துக் குவிப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டு நான், சுதாகரன், இளவரசி ஆகியோர் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டோம்.

முதல்வர் ஜெயலலிதா மற்றும் எங்கள் 3 பேர் மீது பொய் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தகுந்த சாட்சியங்களுடன் இதை நீதிமன்றத்தில் நிரூபிப்பேன் என்றார் சசிகலா.

இதனைத் தொடர்ந்து இந்த வழக்கு தொடர்பான அடுத்த விசாரணை எதிர்வரும் 26ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கொலையுடன் தொடர்புடைய மாலுமிகள் இத்தாலி பயணம்

மீனவர்கள் இருவரை சுட்டுக் கொலை செய்த வழக்கில் இத்தாலிய மாலுமிகள் நீதிமன்ற அனுமதியுடன் நேற்று முன்தினம் இத்தாலி சென்றனர்.

கிறிஸ்மஸ் கொண்டாட சிறப்பு விமானம் மூலம் புறப்பட்டு சென்ற அவர்கள் வரும் ஜனவரி மாதம் மீண்டும் விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி விடுவோம் என்று உறுதிமொழி அளித்துள்ளனர்.

நடந்தது என்ன?

கடந்த பெப்ரவரி மாதம் கேரள கடல் எல்லை அருகே இத்தாலி சரக்கு கப்பல் வந்தது.

இதில் பாதுகாப்பிற்கு வந்த இத்தாலிய வீரர்கள் லத்தூர் மாசிமிலானோ, சல்டோர் கிரோன் இருந்தனர்.

அப்போது எதிரே வந்த மீனவர்களை கடல் கொள்ளையர் என நினைத்து துப்பாக்கியால் சுட்டதில் தமிழக மற்றும் கேரளாவை சேர்ந்த 2 பேர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் இருந்து வந்தனர். இதற்கிடையே கிறிஸ்மஸ் பண்டிகை வருவதால் அதை தங்கள் குடும்பத்துடன் கொண்டாட வேண்டி மத்திய அரசு நீதிமன்றத்தில் அனுமதி கேட்டனர்.

இதனையடுத்து நீதிமன்றம் 6 கோடி ரூபாயை பிணையாக செலுத்தி வரும் ஜனவரி மாதம் 10 ஆம்



திகதிக்குள் திரும்பிவிட வேண்டும் என்று உத்தரவிட்டது. இதன்படி இரு வீரர்களும் நேற்று அதிகாலையில் இத்தாலியில் இருந்து வந்த சிறப்பு விமானம் மூலம் புறப்பட்டு சென்றனர்.

கிறிஸ்மஸ் விழாவுக்கு செல்வதில் எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்று கூறிய மாலுமிகள் மத்திய அரசுக்கு தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். (அ-2)

# ராஜீவ்காந்தி எனது கணவர்: ஆந்திர பெண்ணால் பரபரப்பு

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் மனைவி யார் என்று கேட்டால் சின்ன குழந்தையும் சொல்லும் சோனியாகாந்தி என்று. ஆனால் இப்போது ஆந்திராவை சேர்ந்த ஒரு பெண் ராஜீவ்காந்தி தனது கணவர் என சொந்தம் கொண்டாடுகிறார்.


ஐதராபாத் நிஜாம் சாகித் வீதி தரதாசாகிப் தெருவை சேர்ந்த சபீனா பெரோஸ்கான் (வயது 50) என்பவர் நேற்று முன்தினம் காலையில் ஒரு விண்ணப்ப மனுவுடன் ஸ்ரீபெரும்புதூர் சார்பதிவாளர் அலுவலகத்துக்கு வந்தார். அந்த மனுவில் ராஜீவ்காந்தி என் கணவர். அவரது இறப்பு சான்றிதழ் நகல் வேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தார்.

மனுவை வாங்கி படித்த அதிகாரிகள் ஒரு நிமிடம் திகைத்து போனார்கள். தொடர்ந்து அந்த பெண்ணிடம் விசாரித்தபோதும் ராஜீவ்காந்தி தனது கணவர்தான் என்று ஆணித்தரமாக கூறினார்.

என்ன செய்வது என்று புரியாமல் தவித்த பதிவாளர் ராமலிங்கம் அந்த பெண்ணை காத்திருக்கும்படி கூறிவிட்டு உயர் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு பேசினார். பின்னர் அந்த பெண்ணுக்கு ராஜீவ் காந்தியின் இறப்பு சான்றிதழ் நகலை வழங்கினார். சான்றிதழை வாங்கிக் கொண்டு சபீனா பறந்து சென்றார்.

இந்த சம்பவம் ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதுபற்றி பதிவாளர் ராமலிங்கத்திடம் கேட்டபோது உயர் அதிகாரிகள் அனுமதி பெற்றே சான்றிதழ் வழங்கியதாக தெரிவித்தார்.

சபீனா பெரோஸ்கான் யார் என்பது பற்றி பொலிஸார் இரகசிய விசாரணை மேற்கொண்டுள்ளனர். விரைவில் அவரைப்பற்றி தகவல்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)



சபரிமலையில் நாளை மறுதினம் நடைபெறும் மண்டல பூஜைக்காக ஆரன்முளா பார்த்தசாரதி கோயிலில் இருந்து தங்க அங்கி பவனி சபரிமலை இரதத்தில் புறப்பட்டதைப் படத்தில் காணலாம்.



சென்னை எண்ணூர் துறைமுகத்தில் கடலை தூர்வாறும் டிசிஐ டிரெட்ஜ் எக்ஸ் ஐ எக்ஸ் கப்பலை மத்திய கப்பல் துறை அமைச்சர் ஜி.கே.வாசன் நாட்டிற்கு அர்ப்பணித்ததைப் படத்தில் காணலாம்.

## பாரதச் செய்தி

# அஸ்திரா ஏவுகணையை சோதித்தது இந்தியா

எதிரி நாட்டு விமானத்தை தாக்கக்கூடிய அஸ்திரா ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதாக இந்திய பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தால் முற்றிலும் இந்திய தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட குறித்த ஏவுகணை ஒடிசா மாநிலம் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை மையத்தின் 2 ஆவது தளத்திலிருந்து நேற்று முன்தினம் மாலை 3.34இற்கு செலுத்தப்பட்டதாக அந்த மையத்தின் இயக்குநர் எம்.வி.கே.வி. பிரசாத் தெரிவித்தார்.

3.8மீற்றர் நீளம் கொண்ட இந்த ஏவுகணையை செலுத்துவதற்கு முன்னதாக இதே மையத்திலிருந்து ஆள் இல்லாத லக்ஷயா என்ற விமானம் விண்ணில் செலுத்தப்பட்டது.

அதைக்குறிவைத்து ஏவப்பட்ட அஸ்திரா அந்த விமானத்தை வெற்றிகரமாக தாக்கியது.

இதற்கு முன்பு இதே தளத்திலிருந்து வெள்ளிக்கிழமை அஸ்திரா ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

தொடர்ந்து 2ஆவது நாளாக நடத்தப்பட்ட அஸ்திரா சோதனையும் வெற்றி பெற்றது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

ஒற்றை நிலையைக் கொண்டு திட எரிபொருளில் செயற்படும் இந்த ஏவுகணை இவ்வகை ஏவுகணைகளில் மிகவும் நவீன தொழில்நுட்பம் கொண்டதாகும்.

இந்த ஏவுகணை இந்திய விமானப்படையின் Tejas, Su-30 MKI, Mirage 2000 உள்ளிட்ட போர் விமானங்களில் பொருத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஐந்து இளைஞர்கள் மீது மக்கள் கல்வீச்சு

## ஐவரும் பலியாகினர்

(குந்தி)

ஜார்க்கண்டில் கொள்ளைக் கும்பலை சேர்ந்த 5 இளைஞர்கள் கல்லால் எறிந்து கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜார்க்கண்ட் மாநிலம் குந்தி பகுதியில் ஒரு கிராமத்திற்கு 5 இளைஞர்கள் நேற்றையதினம் திடீரென சென்றனர். அவர்களை கொள்ளையர்கள் என்று சந்தேகப்பட்ட அந்த கிராமவாசிகள் அவர்களை பிடித்துள்ளனர்.

பின்னர் அவர்களை ஆயுதங்களாலும் கற்களாலும் தாக்கியுள்ளனர். இதில் அந்த இளைஞர்கள் 5 பேரும் பலியாகினர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த காவலர்கள் கொல்லப்பட்டவர்களின் உடலைக் கைப்பற்றி அவர்கள் யார் என்று விசாரித்து வருகின்றனர்.

கொலையாளிகளை தேடும் பணியும் நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

**ஹசாரே குழுவினர்**

# மெழுகுவர்த்தி ஏந்தி போராட்டம்

டில்லியில் மருத்துவ மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதற்கும் தூத்துக்குடியில் மாணவி கொலை செய்யப்பட்டதை கண்டித்தும் பேரணி நடத்தப்பட்டது.

இரவில் பெண்கள் சுதந்திரமாக நடமாடுவதை உறுதி செய்ய வலியுறுத்தியும் இதற்கு தேவையாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் சென்னை மெரினா கடற்கரையில் ஹசாரே குழுவினர் கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி பேரணி நடத்தினர். இந்தப் பேரணியில் பலர் கலந்து கொண்டனர். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நாம் ஆக இருப்போம்.
–அன்னை திரசா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்.கட்டளைத் தளபதிக்கு ஓர் அவசர மடல்

யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அவர்களுக்கு அன்பு வணக்கம்.

யாழ்ப்பாணப் பத்திரிகைகள் தொடர்பில் தாங்கள் எதிர்மறையான கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் ஒரு பத்திரிகை தனது பணியை செம்மையாகச் செய்ய வேண்டும் என்பது நமது திண்ணம்.

அதேநேரம் பத்திரிகையில் வரும் செய்திகள் தொடர்பில் சம்மந்தப்பட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கும் பட்சத்தில் அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது பத்திரிகைத் தர்மம்.

அந்தத் தர்மத்திலிருந்து வலம்புரி பத்திரிகை ஒருபோதும் விலகியது கிடையாது.

இதற்கு பலாலி கட்டளைப் பணியகத்தால் அவ்வப்போது அனுப்பப்பட்ட மறுப்பு செய்திகளை வலம்புரி பிரசுரித்தமை சான்றாகும்.

எனினும் குடாநாட்டு பத்திரிகைகள் என்றால் எங்களுக்கு எதிரான செய்திகளைத்தான் பிரசுரிக்கும் என்ற தப்பான கருத்து படைத்தரப்பிடம் ஏற்படுத்தப்பட்டிருப்பது துரதிர்ஷ்டமானது.

உண்மைகள் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் பொய்களே முதன்மை பெறும் என்று நம் சிற்றறிவு சிந்திக்கும் தத்துவத்தை நீங்கள் சீர்தூக்கி ஆராய்வீர்கள் என்று நம்புகின்றோம்.

இவை ஒருபுறம் இருக்க, இப்போது இக்கடிதத்தை எழுதுவதின் அவசரம்; யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலைக்கான தாகும்.

யாழ். கட்டளைத் தளபதி அவர்களே! தங்களிடம் ஒரு விடயத்தை கூறவிரும்புகின்றோம். நான்காம் மாடியில் வைத்து ஒருநாள் முழுவதும் விசாரித்த போது கலங்காத நாம்,

பத்திரிகைப் பேரவையில் ஏழு பேர்கொண்ட குழுக்கு விசாரணை செய்த போது அஞ்சாத நாம், தங்கள் பிள்ளைகளை விடுதலை செய்யுமாறு பல்கலைக்கழக மாணவர்களின் தாய்மார் உங்களிடம் கையேந்தி கண்ணீர் விட்டபோது அழுது கொண்டோம்.

ஏன்தான் எங்களுக்கு இப்படி ஒரு துன்பம் என்பதுதான் அந்த அழுகைக்கான காரணம்.

தடுத்து வைக்கப்பட்ட மாணவர்களில் ஒரு மாணவனின் தாய் வன்னிப் போரில் தன் பெண்பிள்ளை ஒன்றை பறிகொடுத்தவர். அந்தத் தாய் ஓய்வு பெற்ற ஆசிரியை. அவர் உங்கள் முன் கண்ணீர் விட்டு என் மகனை விடுதலை செய்யுங்கள் என்று கேட்டபோது, சமாதான விருதுபெற்ற தாங்கள் என்ன கூறியிருக்க வேண்டும்!

அரசு, பாதுகாப்பு அமைச்சு உட்பட உங்களுக்கு மேற்பட்டவர்கள் என்ற நிர்வாக ஒழுங்குகளுக்கு அப்பால், உங்களுக்கென்று ஒரு மனச்சாட்சி இருக்கும் அல்லவா?

ஆசிரியர்களுக்கு சிங்கள மக்கள் கொடுக்கின்ற மதிப்புக்குறித்து தமிழ் மக்கள் பெருமையாகப் பேசிக்கொள்வார்கள்.

ஆனால் தமிழ் என்று வந்துவிட்டால் அந்த மரியாதையும் உங்களிடமிருந்து அழிந்து போய் விடுகிறதா என்ன? (தொடரும்)

# இராணுவத்தின் புகலிடக் கோரிக்கையை கவனமாக ஆராய ஐ.நா. வலியுறுத்தல்

(நியூயோர்க்)

இலங்கை இராணுவத்தினரின் புகலிடக் கோரிக்கை விண்ணப்பங்கள் குறித்து மிக கவனமாக ஆராயப்பட வேண்டும் என்று அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் அனைத்துலக அகதிகள் பாதுகாப்பு தேவைப்படுவோர் தொடர்பாக அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையம், வழிகாட்டு ஆவணம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

இந்த ஆவணத்தில் இலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள், விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையோர், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள், ஒரு பாலுறவு சேர்க்கையாளர்கள் போன்றோர் அனைத்துலக அகதிகள் பாதுகாப்பு தேவைப்படக் கூடியவர்களாக பட்டியல் இடப்பட்டுள்ளனர்.

அதேவேளை இலங்கை இராணுவத்தினரின் விண்ணப்பங்களை மிக கவனமாக ஆராய வேண்டும் என்றும் அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையம் அறிவுரை வழங்கியுள்ளது.

இலங்கையிலிருந்து புகலிடம் கோருவர்களின் அனைத்துலகப் பாதுகாப்பு தேவைகளை மதிப்பிடுவதற்கான அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையத்தின் தகுதிவழிகாட்டி–2012 என்ற அறிக்கையிலேயே இந்தப் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை வெளியானது. புகலிடம் கோருவோரின் விண்ணப்பங்கள் குறித்து முடிவெடுப்போர் மற்றும் அரசுகளுக்கு உதவும் நோக்கிலேயே இந்த வழிகாட்டி வெளியிடப்பட்டுள்ளது.

இதில் ஈ.பி.டி.பி., புளொட், மற்றும் இலங்கை அரசு ஆதரவு மற்றும் எதிர்த் தரப்பு, துணை ஆயுதக் குழுக்கள் என்பவற்றின் முன்னாள் உறுப்பினர்களின் விண்ணப்பங்களையும் கவனமாக பரிசீலிக்கும்படி அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையம் தெரிவித்துள்ளது. (எ–1)

# கார் பந்தயம் காரணமாக 2.9 மில்லியன் ரூபா நட்டம்

## கொழும்பு மாநகரசபை கூறுகிறது

(கொழும்பு)

ஜனாதிபதியின் மகன்மாரின் ஏற்பாட்டில் கொழும்பில் கடந்த வார இறுதியில் இடம்பெற்ற கார் பந்தயம் காரணமாக ஐக்கிய தேசியக்கட்சியின் ஆளுகைக்குள் உள்ள கொழும்பு மாநகர சபைக்கு 2 மில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளது.

குறித்த பந்தயத்துக்காக விற்பனை செய்யப்பட்ட அனுமதிச் சீட்டுக்களுக்கு வரி அறவிடவேண்டாம் என்று மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க உத்தரவிட்டமை காரணமாகவே இந்த நட்டம் ஏற்பட்டதாக கொழும்பு மாநகரசபை குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி சட்டத்தின்படி மாநகரசபையின் வரையறைக்குள் வரும் இடங்களில் நடைபெறும் நிகழ்வுகளின் அனுமதிச்சீட்டுக்களுக்கு வரி அறவிடப்படவேண்டும்.

எனினும் அதனை மீறி மேல்மாகாண முதலமைச்சர் வரி அறவிடவேண்டாம் என்று கொழும்பு மாநகரசபைக்கு உத்தரவிட்டிருந்தார்.

இது குறித்து கருத்துரைத்துள்ள முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க மக்கள் நலன்கருதி முதலமைச்சர் ஒருவருக்கு தீர்மானம் எடுக்கமுடியும் என்று குறிப்பிட்டுள்ளார். (அ–2)

# மட்டக்களப்பில் தொழுநோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்காணப்படுவதாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கான விசேட தோல்நோய் வைத்திய நிபுணர் என்.தமிழ்வண்ணன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரத்துக்கு அடுத்தபடியாக இலங்கையில் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படும் இரண்டாவது இடமாக மட்டக்களப்பு மாவட்டம் உள்ளது.

இவ்வாண்டின் டிசெம்பர் மாத நடுப்பகுதிவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் 130 புதிய தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார் கள். கடந்த ஆண்டு 151 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 3 வருடகாலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக இனங்காணப்பட்ட தொழுநோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 130 தொடக்கம் 140 என்ற மட்டத்திலேயே உள்ளது.

மட்டக்களப்பில் அதிகரித்துக் காணப்படும் தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்குரிய முயற்சிகளை தொழுநோய்த் தடுப்பு இயக்கம் எடுத்துவருகின்றது என வைத்திய நிபுணர் தெரிவித்தார். (அ–9)

# சமுர்த்தி பண முத்திரையை பெற்றுக்கொள்ளலாம்

பூநகரி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கான சமுர்த்தி பணமுத்திரைக் கொடுப்பனவு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அதைப்பெற்றுக்கொள்ளாத சமுர்த்தி பயனாளிகள் அனைவரும் பூநகரி பிரதேச செயலக சமுர்த்தி வங்கிப் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு பூநகரி பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் சி. கெங்காதரன் தெரிவித்துள்ளார். (அ–3,246)

# எயிட்ஸ் தினத்தையொட்டி விழிப்புணர்வு ஊர்வலம்

(மன்னார்)

உலக எயிட்ஸ் தினத்தையொட்டி மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு ஊர்வலம் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஆரம்பமான குறித்த ஊர் வலம் மன்னார் வைத்திய சாலை வீதியூடாகச் சென்று மன்னார் பஸார் பகுதியை சென் றடைந்தது.

பின் அங்கிருந்து மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியூடாக மீண்டும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையை சென்ற டைந்தது.

இதன்போது மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பொது சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள் உட்பட பல நூற்றுக் கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பதாதைகளை ஏந்தியவாறு சென்றதோடு மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் துண்டுப்பிரசுரங்களையும் வழங்கி வைத்தனர். (அ–2)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனித குல வாழ்வின் இனிமைக்கும் அமைதிக்கும் காயகல்பக் கலை



உடல் மற்றும் மன நலனுக்கு முக்கிய பொருளான விந்து நாதங்களின் பெருமையையும் கற்பு நெறியின் மேன்மையினையும் மனித குலம் உணர வேண்டும். விந்து நாதத்தை இன்பத்துக்குரியதோர் சாதனமாக மட்டும் இன்றைய மனிதர்கள் கருதுகிறார்கள். நோயற்ற உடலுக்கும் தெளிந்த அறிவு மேன்மைக்கும் விந்து நாதந்தான் ஆதாரம்.

எனவே அவற்றைப் புனிதப்பொருளாகக் கருதி அவற்றின் தூய்மையைப்பராமரித்து அவற்றிற்கு மேன்மையளிக்கவும் வேண்டும். அதற்கு உதவுவது தான் காயகல்பக் கலை. உடல் நலமும் மனவளமும் தான் வாழ்வில் வெற்றியையும் நிறைவையும் அளிக்கும். அவற்றை காயகல்பம் கொடுக்கும் என்பது தெரியும் போது தான் இன்றைய மக்கள் குலத்தினர் அக்கலையைக்கற்க முன் வருவார்கள்.

இக் காயகல்பக்கலையைக் கற்க வேண்டிய சரியான வயது உயர் நிலைப்பள்ளி மற்றும் கல்லூரிப் பருவம் தான் . விந்து நாதம் கெட்ட பின் தூய்மைப்படுத்துவது என்பது சரிதான். ஆனால் கெடா முன்னரே அவற்றின் மதிப்பு இளைஞர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். இது வளர்ந்தவர்களாகிய நமது பொறுப்பாக உள்ளது.

எந்த அளவுக்கு இளைஞர்கள் காயகல்பத்தின் மூலம் உடல் வளமும் அறிவு உயர்வும் பெறுகிறார்களே அந்த அளவிற்கு நான் எதிர்கால சமுதாயத்தில் இனிமையும் அமைதியும் நிலவ முடியும்.

இந்த உண்மையை மனவளக்கலை மன்றத்தினர்களும் மற்றும் கல்விக்கூட மேலாளர்களும் உணர்ந்து கொண்டு இளைஞர்கள் / மாணவர்கள் மத்தியில் காயகல்பத்தையும் மனவளக்கலையையும் அறிமுகப்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ்.இந்துக் கல்லூரியை வீழ்த்தி சென்.ஜோன்ஸ் அபார வெற்றி



இலங்கை துடுப்பாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.பாடசாலைகளுக்கு இடையிலான 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் தற்போது நடைபெற்று வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இரண்டாம் சுற்றுப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

இதன் முதல் சுற்றுப்போட்டிகள் மட்டுப்படுத்தப் படாத பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட போட்டி களாகவும் இரண்டாம் சுற்றுப்போட்டிகள் 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட பந்து பரிமாற்றங்களை கொண்ட போட்டியாகவும் நடை பெறுகின்றது. மேற்படி போட்டியொன்றில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக்கல்லூரி அணி 28 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இல க்குகளையும் இழந்து 44 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பாக சொரோபன் 6 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும் யதுசன் 4 இலக்குகளையும் கைப்பற்றினர். 45 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 14 ஓவர்களில் ஒரு இலக்கினை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் கிரிசன், சொரோபன், எல்ஷன் முறையே 14, 12, 14 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

## தெல்லிப்பழை யூனியனின் வர்ண விருதாளர்கள்

(மல்லாகம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 2012 ஆம் ஆண்டுக்கான வர்ண விருதுப்பொறிக ளினை பின்வரும் மாணவர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர். சிறந்த மெய்வல்லுநர் ஆண் கு.சாய்சங்கர், சிறந்த மெய்வல்லுநர் பெண் சி.கீர்த்திகா, சிறந்த துடுப்பாட்ட வீரர் ல.ஆகீசன், சிறந்த உதைபந்தாட்ட வீரர் த.மகிதரன், ச.வைஸ்ணவி, ப.சுவர்ணா, வி.சுவேதா, யோ.டிலக்ஸனா, மு.கேமசுதா, தி.லகிதா, இ.மோகனா, சி.கீர்த்திகா, சிறந்த மேசைப்பந்தா ட்ட வீரர்கள் ந.கனிஸ்ரன், சி.சிந்தாகரன், சிறந்த மேசைப்பந்தாட்ட வீராங்கனைகள் ஸ்ரீ.சிந்துஜா, தெ.கீர்த்தனா, சிறந்த சதுரங்க வீரர் வ.ஜெரூசன், சிறந்த சதுரங்க வீராங்கனை ஜெ.பிறிணியா, சிற ந்த கொக்கி வீரர்கள் அ.அன்ராஜ், அ.அனஸ் ராஜ், ஜெ.பிரசாந், த.மகிதரன் ஆகியோர் வர்ண விரு துப் பொறிகளை பெற்றுக் கொண்டுள்ளனர்.(21)

# சாதனையாளர்களை கௌரவிக்க ஆளுநர் நிதியுதவி

(மல்லாகம்)

அளவெட்டி அருணோதயாக்கல்லூரியின் தேசிய மட்ட விளையாட்டுத்துறை சாதனையினை கௌரவித்து வடமாகாண ஆளுநர் நிதியில் இருந்து கல்லூரியின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்காக வழங்கியுள்ளார்.

தேசிய மட்டம் உள்ளிட்ட பல்வேறு நிலைகளில் சாதனைகளை நிகழ்த்திய வடக்கு மாகாண விளையாட்டு வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் ஒழு ங்குபடுத்தப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் வைத்து ஆளுநர் மேற்படி நிதிக்கான காசோலையினை கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரனிடம் கையளித்தார். (21)

# வடமாகாண சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வர்ண இரவு 2012 ஆம் ஆண்டு நிகழ்வுகள் அண்மையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் நடை பெற்றது.

வடமாகாணத்தின் சார்பில் பங்குபற்றி தேசிய மற்றும் சர்வதேச ரீதியில்வெற்றியீட்டிய வீர வீராங்கனைகளுக்கான பதக்கங்களும் வெற்றிக் கேடயங்களும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டன.

தொடர்ந்து மூன்றாவது வருடமாக நடைபெறும் இவ்வர்ண இரவுகள் நிகழ்வில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 213 வீர,வீராங்கனைகளும் வவுனியாவைச் சேர்ந்த 42 வீர,வீராங்கனைகளும் மன்னாரைச் சேர்ந்த 35 வீர,வீராங்கனைகளும் கிளிநொச்சியைத் சேர்ந்த 10 வீர,வீராங்கனைகளும் கௌரவிக்கப்பட்ட னர். அத்துடன் அவர்களுக்கு பயிற்சிகளை வழங்கிய பயிற்றுநர்களும் அதிபர்களும் இந் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

வடமாகாண சார்பில் அதிக தங்க பதக்கங்களாக 9 தங்க பதங்களை வென்றெடுத்த அருணோதயக் கல்லூரிக்கு 0.5 மில்லியன் பெறுமதியான காசோ லையும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டது.

மாற்றுவலுவுள்ளோருக்காக மலேசியாவில் நடைபெற்ற போட்டியில் வெற்றியீட்டிய கிளிநொ ச்சியினைச் சேர்ந்த 3 வீராங்கனைகளும் விசேடமா கக் கௌரவிக்கப்பட்டனர்.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவான ந்தா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

வடக்கு மாகாண பூப்பந்தாட்ட சங்கம் வருடாவருடம் நடத்தும் பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி தொடரில் யாழ்.மாவட்டத்துக்கான ஏ பிரிவு போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி மானிப்பாய் இந்துக்கல்லூரி உள்ளக விளையாட் டரங்கில் இடம்பெற்றுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் 27 ஆம் திகதி இடம்பெறும் இடத்துக்கு நேர காலத்துடன் சமூகம் தந்து தங்களது பதிவினை பதிவு செய்து கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேற்படி போட்டி தொடர்பாக மேலதிக விப ரங்கள் தேவைப்படின் யாழ். மாவட்ட மெய் வன்மைப் பயிற்றுநர் மோகனுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாரந்தனை அண்ணா வி.கழகத்தின் விளையாட்டுப்போட்டி முடிவுகள்

நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழகம், நார ந்தனை பிரதேச விளையாட்டுக்கழகங்களுக் கிடையில் மென்பந்தாட்ட துடுப்பாட்ட போட்டிகள் மற்றும் காற்பந்தாட்டப் போட்டிகளை தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வந்தது.

மேற்படி போட்டிகளில் காற்பந்தாட்ட போட்டி களில் தம்பசிட்டி காந்திஜி விளையாட்டுக்கழகம் சம்பியனாகியதுடன் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக்கழகம் 2 ஆம் இடத்தைப் பெற்றது.

மென்பந்து துடுப்பாட்ட போட்டியில் சம்பி யனாக அல்லைப்பிட்டி பிலிப்ஸ் விளையாட்டுக் கழக ஏ அணியும்இரண்டாமிடத்தினை அதே கழகத்தின் பி அணியும் பெற்றுக் கொண்டன.

மேற்படி நிகழ்வுகளின் பரிசளிப்பு விழா அண்மையில் வெள்ளிக்கிழமை நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. வெற்றி பெற்ற வீரர்களுக்கான வெற்றிக்கேடயங்களும் வழங்கப் பட்டன.

## சிறிமுருகன் ஒக்ஸ்பேட் காலிறுதிக்கு தகுதி

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 6 பேர் 5 ஓவர்கள் கொண்டவிலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.


ஏ பிரிவில் நடைபெற்ற முதல் சுற்றுக்களில் நெல்லியடி சிறிமுருகன் விளையாட்டுக்கழகம், மானிப்பாய் ஒக்ஸ்பேட் விளையாட்டுக்கழகமும் காலிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

இக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அடுத்த காலிறுதி போட்டியும் இறுதிப் போட்டியும் அடுத்த வாரமளவில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக் கேடயமும் பெறுமதியான பொருட்க ளும் வழங்கப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavahaham.org

# ஒருநாள் போட்டியிலிருந்து சச்சின் ஓய்வு




இந்திய கிரிக்கெட் அணியின் சாதனை வீரரான சச்சின் டெண்டுல்கர் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 23 வருடங்களாக இந்திய அணியில் நீடித்துவரும் டெண்டுல்கரின் அண்மைய ஆட்டங்கள் கடும் விமர்சனத்துக்குள்ளாகியிருந்தது. இதனால் அவர் ஓய்வுபெற வேண்டும் என்ற குரலும் வலுத்தது.

இந்நிலையில், இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணியுடன் ஒருநாள் போட்டிகள் நடைபெற இருக்கின்றன. இதற்கான அணித் தேர்வு நேற்று மும்பையில் நடைபெற்றது.

இந்நிலையில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கும் டெண்டுல்கர், ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற முடிவு செய்திருப்பதாக தெரிவித்திருக்கிறார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உறுதி செய்திருக்கிறது. இதுவரை மொத்தமாக 463 ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருக்கும் சச்சின், 18,426 ஓட்டங்களைக் குவித்திருக்கிறார்.

ஒருநாள் போட்டிகளில் உலக அளவில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர் என்ற பெருமை சச்சினுக்கு உண்டு.

ஓய்வு குறித்து சச்சின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

நான் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற முடிவு செய்துள்ளேன். உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் சம்பியனாகும் அணியில் இருக்க வேண்டும் என்ற எனது கனவு நனவாக ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறது.

2015-ம் ஆண்டு நடக்கும் உலக்கிண்ணத்தை வெல்ல விரைவில் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்திய அணிக்கு எனது வாழ்த்துக்கள். இத்தனை ஆண்டுகளாக என்னை ஆதரித்த அனைவருக்கும் நான் நன்றிக் கடன்பட்டவனாக உள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

சச்சின் பாகிஸ்தானுக்கு எதிராக கடந்த 1989-ம் ஆண்டு முதன்முதலாக சர்வதேச ஒருநாள் போட்டியில் விளையாடத் தொடங்கினார்.

தற்போது பாகிஸ்தானுக்கு எதிராக விளையாட உள்ள இந்திய அணி தேர்வு செய்யப்படவுள்ள நிலையில் சச்சின் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.



## வவுனியாவில் அடைமழை...

...ன்படி வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

இருப்பினும் பெரியளவிலான வாகனங்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஹயஸ் போன்ற சிறியரக வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட பொலிஸார் அனுமதிக்கவில்லை.

இதேவேளை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவிலும் மழை பெய்யத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சீரற்ற காலநிலை, மழை மற்றும் வெள்ளம் காரணமாக நாடளாவிய ரீதியில் இறந்தவர்களின் எண்ணிக்கை 42 ஆக உயர்வடைந்துள்ளது.

சீரற்ற காலநிலை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் 100 நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் வவுனியாவிலேயே அதிக மழை வீழ்ச்சி 225.7 ம...லி மீற்றர்களாக பதிவாகியுள்ளது. இதனிடையே, வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட ஆராச்சிகட்டுவ - முக்தன்தலுவ பிரதேச வாசிகள் தமக்கு நிவாரணங்கள் கிடைக்க வில்லை எனத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இதனிடையே, இயற்கைச் சீற்றம் காரணமாக இதுவரை பலியானவர்களின் எண்ணிக்கை 42 ஆக அதிகரித்துள்ளது. இத்தகவலை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதி ஊடகப் பணிப்பாளர் சரத் லால் குமார உறுதிப்படுத்தினார்.

அதிகமழை காரணமாக கந்தளாய் குளத்தின் அனைத்து அவசரக் கதவுகளும் தற்போது திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எல்.எம்.புத்திக தெரிவித்துள்ளார்.

கந்தளாய் குளத்தில் 10 அவசரக் கதவுகளும், 3 அடிகள் வீதம் திறக்கப்பட்டுள்ளன. பராக்கிரம சமுத்திரத்திரத்தின் 8 அவசரக் கதவுகள் 6 அடிகள் வீதம் திறக்கப்பட்டுள்ளன.

பிரதான 71 நீர்த்தேக்கங்களில் 40 நீர்த்தேக்கங்கள் உயர்மட்டத்தை அடைந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் ஜானகி மீகஸ்தென்ன தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மாத்தளை மாவட்டத்தில் அபாய நிலையை எதிர்நோக்கக்கூடிய மூன்று இடங்களை இனங்கண்டுள்ளதாக தேசிய கட்டடத்துறை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதிகளில் நேற்று ஆய்வுகளை மேற்கொண்டதாக அந்த நிறுவனத்தின் மண்சரிவு பிரிவின் பிரதானி ஆர்.எம்.எஸ்.பண்டார தெரிவித்தார்.

வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டத்திலும் அனர்த்த நிலைமைகளால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேசத்தில் தம்பனைக்குளத்தில் 150 குடும்பங்களைச் சேர்ந்த 645 பேர் சின்னப்பண்டிவிரிசானில் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நானாட்டன் - மடுக்கரை பகுதியில் 420 குடும்பங்களைச் சேர்ந்த 1659 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் நாட்டின் பல பகுதிகளில் தாக்கம் செலுத்தியுள்ள மழையுடன் கூடிய காலநிலை அதிகரிக்கலாம் எனவும் வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-11,266)

## சூரியனை...

காட்சியும் தென்பட்டுள்ளது. இக்காட்சியினை வெற்றுக் கண்களால் பார்க்கக் கூடியதாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## இந்திய மீனவ...

மேற்பட்ட இந்திய ரோலர் படகுகளில் அக்கடற் பிரதேசத்துக்குள் அத்துமீறி நுழைந்து மீனவர்களின் வலைகளையும் அறுத்து, படகுகளையும் சேதப்படுத்தி, அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் எடுத்ததோடு அவர்களையும் பயமுறுத்தியும் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக உடனடியாக இலங்கை கடற்படைக்கு அறிவிக்கப்பட்டும் அவர்கள் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர். (எ-6,11)

## இளைஞனை...

முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 11 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் தனது மகனைக் காணாததால் அச்சமடைந்த தாயாரால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு உள்ளது. (எ-4)

## 3 மணி நேரம்...

ஒரு மணியளவில் தற்காலிகமாக மூடப்பட்டது.

அடை மழையினால் வவுனியா, நொச்சி முனை ஆகிய இடங்கள் வெள்ளத்தில் மூழ்கின. இதனையடுத்தே ஏ9 வீதியின போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

அத்துடன் வவுனியா - செட்டிக்குளம் வீதியில் பாவற்குளம் வெள்ளத்தில் மூழ்கியதனால் அந்த வீதியினூடான போக்கு வரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனினும் மூன்று மணி நேரங்களின் பின் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டது.

ஏ9 வீதியில் சாந்தசோலை சந்தியில் இருந்து கொக்குவெளி மற்றும் நொச்சி மோட்டை பாலம் வரையான பகுதிகள் கடும் வெள்ளத்தால் பாதிப்படைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## கலர் மழை...

மழையும் பன்னம்பிட்டிய கிராமத்தில் சிவப்பு மழையும், திகுனல கிராமத்தில் மீன் மழையும் பெய்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 10.20 மணிமுதல் 10.45 மணிவரையே இவ்வாறு மழை பெய்துள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

இவ் வருடத்தில் இலங்கையில் என்றுமில்லாதவாறு சிவப்பு, மஞ்சள் மழை மற்றும் மீன் மழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஜனநாயகத்தை இல்லாதொழி...

நேற்று முன்தினம் காலை தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்ற நீதிபதிகளின் வருடாந்த மாநாட்டில் பிரதம பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவும் கலந்து கொண்டிருந்த மேற்படி மாநாட்டில் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் தொடர்ந்து கூறியதாவது,

தற்போது நடைமுறையிலுள்ள 1978-ம் ஆண்டின் அரசியலமைப்பின் படி நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி சகல அதிகாரங்களைக் கொண்டவராக இருக்கிறார்.

இதனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது அதிகாரங்களை ஜனாதிபதியிடம் தாரைவார்த்து விட்டு வெறும் கைப் பொம்மைகளாகச் செயற்படும் நிலை தோன்றியுள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரங்களை ஓரளவுக்கு கட்டுப்படுத்தும் வகையில் 17-வது திருத்தம் அமைந்திருந்த போதும் அதை வலுவற்றதாக்கும் முறையில் 18-வது திருத்தச்சட்ட மூலம் கொண்டு வரப்பட்டது.

18-வது திருத்தச்சட்டம் இலங்கையின் அரசியல் முறைமையின் ஸ்திரத் தன்மையை இல்லாதாக்கிவிட்டது. இப்படியான பாதிப்புகள் காலஞ்செல்லச் செல்ல அதிகரித்துச் செல்லும் போக்கையே காண்பிக்கின்றது.

ஜனநாயக வழிமுறைகளை இல்லாதொழிக்கும் வகையில் 18-ம் திருத்தம் அமைந்துள்ளது. இத்தகைய பாதிப்புக்களை கொண்ட 18-வது திருத்தத்தை சட்டமாக்குவதற்கும் உயர் நீதிமன்றமே காரண கர்த்தாவாக இருந்துள்ளதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இன்றைய உங்களது கூட்டத்தை நடைபெறாதிருக்க தடை விதிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதும் இந்த அதிகாரங்களின் எதிரொலியே. என்றாலும் குகையின் முடிவில் ஒரு ஒளிக்கீற்று தென்படுகிறது.

பதவியிலுள்ளவர்கள் நீதிபதிகளின் வருடாந்த மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள் என்றால். அச்சத்தினதும் பல வீனத்தினதும் பிரதிபலிப்பு அல்லவா? உங்களது ஒற்றுமை அவர்களுக்கு தலையிடியாக அமைகின்றதாக தென்படுகின்றது.

சமநிலை தவறாது உங்கள் கடமைகளினை செவ்வனே செய்வதுதான் உங்களிடம் மக்கள் எதிர்பார்ப்பது. உங்களது ஒற்றுமையைச் சிதைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை எதிர்பார்க்கலாம்

உங்களது ஒற்றுமைதான் ஜனநாயகத்தையும் சட்ட ஆட்சியையும் நிலைநிறுத்த உதவும் என அவர் மேலும் கூறினார். (எ-11)


## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆசிரமச் சிறுவர் இல்லத்திற்கு கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடங்கள் உண்டு.

1. நடன ஆசிரியர் (பெண்) - பட்டதாரி ஆசிரியர் விரும்பத்தக்கது.
2. கணினி ஆசிரியர்கள் - பட்டதாரிகள், டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள், வெப் டிசைனிங் செய்யக்கூடியவர்கள் விண்ணப்பிக்கலாம்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து சேவைபுரிய விருப்பம் கொண்ட நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமும் உள்ள 21 முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். (கிழமை நாட்கள் மட்டுமன்றி சனி, ஞாயிறு ஆகிய நாட்களிலும் பணியாற்ற வேண்டும்.)

ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 30.12.2012

தொடர்புகளுக்கு:-
தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர்
கிளிநொச்சி
தொலைபேசி இலக்கம்: 077-0604950, 021-4923118

(இ-1893)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சபாநாயகருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுக்கவில்லை

## சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கும் சபாநாயகருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை விடுக்கவில்லை. அறிவிப்பொன்றையே விடுத்துள்ளது என்று எதிரணிகள் தெரிவித்துள்ளன.

எதிர்க் கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் மைக்கல் பெரேரா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியும் சட்டத்தரணியுமான எம்.சுமந்திரன் ஆகியோரே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

சுமந்திரன் எம்.பி கருத்துத் தெரிவிக்கையில்,

சட்டத்தரணியான பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

தெரிவுக்குழுவுக்கும் சபாநாயகருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை விடுக்கவில்லை. அழைப்பொன்றையே விடுத்துள்ளது. அதனையும் அவமதிக்காது செயற்படல் வேண்டும்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ஜோசப் மைக்கல் பெரேரா எம்.பி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவிப்பை மதிக்காவிடின் தெரிவுக்குழு தொடர்பில் நீதிமன்றத்துக்கு ஒரு பக்கச் சார்பான தீர்ப்பை எடுக்க வேண்டிவரும்.

நாடாளுமன்றமும், சட்டவாக்கமும் இறையாண்மை மிக்கதல்ல; மக்களே இறையாண்மை மிக்கவர்கள் என்றார். (எ-11)


## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக்கு அருகாமையில் உள்ள இல.400, மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள புதிய கடைகள் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு : T.P.: 0772100909, 0778445932

(1322)


## நிர்வாகத்தின் அனு...

தலைமையத்தில் சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக வளாகத்தினுள் இராணுவத்தினர் செல்வதானால் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் முன்னறிவித்தல் பெறப்படவேண்டும்.

ஆனால் கடந்த 27-ம் திகதி மாணவர்களின் விடுதிக்குள் இராணுவம் அனுமதி பெறாமல் சென்றமை, பெண்கள் விடுதிக்குள் பெண் இராணுவத்தினர் இன்றிச் சென்றமை போன்றவை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இதற்குத் எதிர்ப்புத் தெரிவித்தே தாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக மாணவப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

எனவே இனிவருங்காலங்களில் நிர்வாகத்தின் அனுமதி பெற்றே இராணுவத்தினர் பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைய வேண்டும் என துணைவேந்தர் தெரிவித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட கட்டளைத் தளபதி, கடந்த 27-ம் திகதி இடம்பெற்ற சம்பவங்களுக்கு வருத்தம் தெரிவித்ததுடன், இனி வருங்காலங்களில் இவ்வாறு இடம்பெறாது என உறுதியளித்ததுடன்,

பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை சீரழிக்கும் வகையில் அரசியல்வாதிகள் பல்கலைக்கழகத்தினுள் நுழைவதை முற்றாகத் தடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (எ-1)

# வாள்வெட்டில் இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதலையடுத்து மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அரியாலை மற்றும் குருநகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த இளைஞர் குழுக்களுக்கு இடையிலேயே இந்த மோதல் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குருநகர் பகுதியில் வைத்து இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 24 வயதான அன்ரன் சுரேந்திரன் என்ற இளைஞனே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மதுபோதையில் இருந்த இளைஞர் குழுக்களுக்கிடையிலேயே இந்த கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)


புதிய முகவரி

ஹரன் ஜுவல்லர்ஸ்

நகை வைர வியாபாரிகள்

இல.217 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 6083, 0714182480


## மரண அறிவித்தல்கள்

### திருமதி முத்துத்தம்பி இராசமலர்



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலடியைவசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துத்தம்பி இராசமலர் நேற்று (23.12.2012) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் (ஆங்கில ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்துரை சிவபாக்கியம் தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, நாமுத்துத் தம்பதியரின் மருமகளும், பாஸ்கரன், மனோகரன் (பிரான்ஸ்), செல்வஸ்தான் (அதிபர்/யாழ்ப்பாணம் இணுவில் இந்துக் கல்லூரி) ஆகியோரது பாசமிகு தாயாரும், நாகேஸ்வரி, இராசமலர் (பிரான்ஸ்), சந்திரவதனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆதவன் (பிரான்ஸ்), கௌசிகன் (பிரான்ஸ்), தக்ஷாயனி (மாணவி, யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ரக்ஷனா (மாணவி, யாழ்ப்பாணம்/இந்து மகளிர் கல்லூரி), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (24.12.2012)அன்னாரின் இல்லத்தில் 1.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.30 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அதிபர்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி

தகவல்:
குடும்பத்தினர்
(மு.செல்வஸ்தான்)

(1324)

### கதிர்காமு நகுலநாதன்

கச்சாய் தெற்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு நகுலநாதன் அவர்கள் (Hollnd)நெதர்லாந்தில் 2012.12.23ம் திகதி ஞாயிறு அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கதிர்காமு இராசம்மாவின் மகனும், கிருஷ்ணசாமி இராசம்மாவின் மருமகனும், தேவநாயகியின் அன்புக்கணவரும், அனுசன், விகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவலோகநாதன் (செல்வன்), கமலினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலாதேவி, சுதேஸ்வரன், செல்வராசா, பேரின்பநாதன், கணேசமூர்த்தி, உதயச்சந்திரன், செல்வராணி, ஆனந்தராணி, மதிவதனி ஆகியோரின் மைத்துனரு மாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உபயகதிர்காமம்
கந்தமுருகேசனார் வீதி,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்

(ஜ-1890)


நீங்கள் விரும்பியபடி

வீடு,காணி வாங்கிக் கொடுப்பதற்கும் விற்றுக் கொடுப்பதற்குமான ஒரே நிறுவனம்

ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்

RAJALUXMY ENTERPRISE

26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரிக்கு முன்பாக)

தொலைபேசி : 0 77 999 4603

(இ)



மணல் விற்பனைக்குண்டு

கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

4 டிரக்டர் - 20,000/-

தொடர்புகளுக்கு
தீபன்
0722694462

(1320)



ஒலிம்பியாவின் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

இன்றே விரையுங்கள்...

நவீன தொழில்நுட்பத்துடன் Orbitrack மற்றும்
Home Gym, Bench, AbCircle, Trade mill போன்ற பல
உடற்பயிற்சி சாதனங்களுக்கு

~~17,900/-~~ 17, 500/- ~~16,900/-~~ 16, 500/- ~~14,900/-~~ 14,500/- ~~13,900/-~~ 13,500/-

இத்துடன் பெறுமதி மிக்க பரிசு




கொள்வனவு செய்யப்படும் Orbitrack இற்கு Scale ஒன்று

31.12.2012 வரை

Sports Shoes - ~~2550~~, 2000 மற்றும்
Jersey - ~~875/-~~ 700/-
Bottom - ~~750/-~~ 600/-
Shorts - ~~450/-~~ 300/-

ஒலிம்பியா ஸ்போட்ஸ்

இல.06, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3490, 0778060267

நீங்கள் நம்பமுடியாத விலைக்கழிவில்...


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.